07.03.16

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தில்லியில் மார்ச் 19-இல் விவசாயிகள் மாநாடு: பிரதமர் மோடி தொடங்கி வைக்கிறார்

அகில இந்திய அளவிலான விவசாயிகள் மாநாடு தில்லியில், வரும் 19-ஆம் தேதி நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைக்கிறார். நாடெங்கிலும் இருந்து சுமார் ஒரு லட்சம் விவசாயிகள் இந்த மாநாட்டில் கலந்துகொள்ள உள்ளனர் என்று மத்திய வேளாண் துறை அமைச்சகத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார். அந்த அதிகாரி மேலும் கூறியதாவது:

தில்லியில் உள்ள இந்திய வேளாண் ஆராய்ச்சி மைய வளாகத்தில் இந்த மாநாடு நடைபெறவுள்ளது. இதில், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள் சார்பில் 600 அரங்குகள் அமைக்கப்பட்டிருக்கும். தற்போது சந்தைக்கு வந்துள்ள புதிய ரக பயிர் வகைகள், விவசாயத்துக்குப் பயன்படுத்தப்படும் அதிநவீன தொழில்நுட்பங்கள் ஆகியவை தொடர்பான கண்காட்சியும் மாநாட்டில் இடம்பெறும்.

வேளாண் துறையில் மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள புத்தம் புதிய திட்டங்கள் குறித்து பல்வேறு மொழிகளில் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. விவசாய வளர்ச்சிக்காக பட்ஜெட்டில் வெளியிடப்பட்டுள்ள புதிய அறிவிப்புகள் குறித்து விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்படும் என்றார் அந்த அதிகாரி.

### விவசாயிகளுக்கும், அடித்தட்டு மக்களுக்குமான பட்ஜெட்:தொழில் வர்த்தக சங்க கூட்டத்தில் தகவல்

விவசாயிகளுக்கும், அடித்தட்டு மக்களுக்கும் பயன் அளிக்கும் வகையில் மத்திய பட்ஜெட் அறிவிக்கப்பட்டுள்ளது என்று தமிழ்நாடு தொழில்

வர்த்தக சங்கத்தில் நடைபெற்ற பட்ஜெட் விளக்கக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கம் சார்பில் 2016-17 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் விளக்கக்கூட்டம் சனிக்கிழமை நடைபெற்றது. சங்கத் தலைவர் என்.ஜெகதீசன் தலைமை வகித்தார். இதில் பட்டயக் கணக்காளர் ஜி.ராமசாமி பேசியதாவது:

இந்த பட்ஜெட்டில் ரூ.97 ஆயிரம் கோடி போக்குவரத்து துறை வளர்ச்சிக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. ரூ.38 ஆயிரம் கோடி விவசாயத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. விவசாயத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை பொதுமக்களிடம் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதுவரை அறிவிக்கப்பட்ட பட்ஜெட்களிலேயே விவசாயத்துக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது இந்த பட்ஜெட்டில் தான். கிராம வளர்ச்சிக்கும் ரூ.2 லட்சம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதுபோன்ற அறிவிப்புகளால் விவசாயிகளும், கிராமப்புற மக்களும் பயனடைய வாய்ப்புள்ளது. ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கப்பட்டுள்ள தொகையை பார்க்கும்போது இது சீரான வளர்ச்சியை அளிக்கும் பிரமாண்டமான பட்ஜெட் எனத் தெரிகிறது. இந்தத் திட்டங்களுக்கான தொகையை பொதுநிறுவனப் பங்குகளை விற்பதன் மூலமும், வெளிநாட்டு நிறுவன முதலீடுகளை அதிகரிப்பதன் மூலமும் திரட்ட திட்டமிடப்பட்டுள்ளது. தனி நபர் வருமான வரிவிலக்கு வரம்பு ரூ.4 லட்சமாக அதிகரிக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை இந்தப் பட்ஜெட்டிலும் ஏற்கப்படவில்லை. தனி நபர் வருமான வரிவிலக்கு வரம்பை ரூ.2 லட்சத்தில் இருந்து இரண்டரை லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது. மேலும், மூத்தக் குடிமக்களுக்கும் வரி உண்டு என அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிவிப்புகள் பொதுமக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

டிஜிட்டல் இந்தியா திட்டத்தின் உதவியுடன் வருமான வரித்துறையில் புதிய தொழில்நுட்பங்கள் அதிகளவில் பயன்படுத்தப்படுகிறது. இதனால் ரூ.10 லட்சத்துக்கும் மேல் வங்கியில் சேமிப்பு வைத்திருப்பவர்கள் விபரம், ரூ.2 லட்சத்துக்கும் அதிகமாக சொத்துக்கள் வாங்குவோர் விவரம்

ஆகியவை வருமான வரித்துறைக்கு தெரியப்படுத்தப்படும். இதனால் வருமான வரி செலுத்தாமல் இருப்பவர்கள் எண்ணிக்கை கட்டுப்படுத்தப்படும். இந்தப் பட்ஜெட்டில் புதிதாக டிசிஎஸ் எனப்படும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன்மூலம் ரூ.2 லட்சத்துக்கும் அதிகமாக பொருட்கள் வாங்கும் நபர்களிடம் இருந்து 1 சதவீத வட்டியை சம்பந்தப்பட்ட நிறுவனம் வசூலித்து அரசிடம் செலுத்தும். மேற்கூறிய அம்சங்களை கணக்கில் கொள்ளும்போது இது விவசாயத்தையும், அடித்தட்டு மக்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் வகையிலான பட்ஜெட் என்றார்.

தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்கத்தின் முதுநிலைத் தலைவர் எஸ்.ரத்தினவேலு, இணைச் செயலர் ஜெ.செல்வம், பொருளாளர் டி.எஸ்.ஜீயர் பாபு, பட்டயக் கணக்காளர்கள் வி.அழகப்பன், எம்.சுப்பையா, எஸ்.ஜெயக்குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

**உழவாலயம் அமைக்க அடிக்கல் நாட்டு விழா**

பல்லடம் அருகே உள்ள காரணம்பேட்டையில் உழவர் உழைப்பாளர் கட்சி சார்பில் உழவாலயம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இவ்விழாவுக்கு உழவர் உழைப்பாளர் கட்சியின் மாநிலத் தலைவர் கே.செல்லமுத்து தலைமை வகித்தார். மாநிலப் பொதுச் செயலாளர் ஏ.பி.திருநாவுக்கரசு, மாநிலப் பொருளாளர் ஈ.பாலசுப்பிரமணியம், ஆலோசகர் கே.சி.எம்.பாலசுப்பிரமணியம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திருப்பூர் மாவட்ட இளைஞரணித் தலைவர் வாவிபாளையம் சோமசுந்தரம் வரவேற்றார். விழாவில் உலக நலன் கருதி 108 கோமாதா பூஜை, உழவர் வளம் காண 108 யாக வேள்வி ஆகியவை நடைபெற்றது. இதை கோவை காமாட்சிபுரி ஆதினம் சிவலிங்கேஸ்வர சுவாமிகள் தலைமையில் உலக சமாதான தெய்வீகப் பேரவையின் வேள்விக் குழுவினர் நடத்தினர். உழவாலயம் அமைப்பதற்கான அடிக்கலை கோவை கே.எம்.சி.எச். மருத்துவமனையின் தலைவர் நல்ல ஜி. பழனிசாமி, சூலூர் ஆர்.வி.எஸ்.குழுமத்தின் தலைவர் கே.வி.குப்புசாமி ஆகியோர் நட்டு வைத்தனர். இதுகுறித்து உழவர் உழைப்பாளர் கட்சியின் மாநிலத்

தலைவர் கே.செல்லமுத்து கூறியதாவது: இந்த உழவாலயத்தில் 500 பேர் அமரக் கூடிய அளவில் கூட்ட அரங்கம், மழை, வெயில், விளை பொருள்களிள் விலை நிலவரங்ரகளை விவசாயிகள் அறிந்து கொள்ளும் வகையில் இண்டர்நெட் வசதியுடன் கூடிய தகவல் மையம், வேலை வாய்ப்பு, திருமண தகவல் மையம் ஆகியவை அமைக்கப்படவுள்ளது. மேலும், விவசாயிகளின் பிள்ளைகள் உயர் கல்வி பயில சிறப்பு பயிற்சி வகுப்புகள் ஆகியவையும் இங்கு நடத்தப்படும் என்றார். இவ்விழாவில், ராஜரீகா எழுதிய "இயற்கை உரம் இறவா வரம்' என்னும் நூல் வெளியிடப்பட்டது. பேரூர் ஆதினம் மருதாசல அடிகளார், சிரவை ஆதினம் குமரகுருபர சுவாமிகள், பழனி சாது சண்முக அடிகளார், முத்து சிவராமசாமி அடிகளார், பழனிசாமி அடிகளார் ஆகியோர் அருளுரை நிகழ்த்தினர்.

இதில், முன்னாள் அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பாஜக மாவட்டத் தலைவர் எஸ்.டி. மோகன் மந்திராசலம், காங்கிரஸ் மாவட்டத் தலைவர் வி.எஸ்.சி.மனோகரன், ஆடிட்டர் பாலு, விவசாயிகள் சங்கத் தலைவர்கள் என்.எஸ்.பழனிசாமி, மருத்துவர் சிவசாமி உள்பட பலர் பங்கேற்றனர். திருப்பூர் மாவட்டச் செயலாளர் ஆர்.ஈஸ்வரமூர்த்தி, கோவை மாவட்டச் செயலாளர் எஸ்.எல்.பாலசுப்பிரமணியம் ஆகியோர் நன்றி கூறினர்.

**கோபி கோட்டத்தில் 36,000 கால்நடைகளுக்கு தடுப்பூசி**

கோபி கோட்டத்தில் மூன்று நாள்களில் 36,000 கால்நடைகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. கோபி கோட்டத்துக்கு உள்பட்ட 9 ஒன்றியங்களில் கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம் நடைபெற்றது.

இதில், 175 வருவாய்க் கிராமங்களில், 2.4 லட்சம் கால்நடைகளுக்குத் தடுப்பூசிசி போட இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 76 மருத்துவக் குழுக்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளன. தற்போது 29,750 மாடுகளுக்கும், 6,250 எருமைகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. கடம்பூர் பகுதி மலைக் கிராமங்களில் 7,000 மாடுகளுக்குத் தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

## ரூ. 20 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

அவல்பூந்துறை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ. 20 லட்சத்துக்கு கொப்பரை ஏலம் சனிக்கிழமை நடைபெற்றது. மொடக்குறிச்சி மற்றும் அறச்சலூர் சுற்றுவட்டாரப் பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் 1,043 மூட்டைகளில் 40,319 கிலோ கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 58.55-க்கும், குறைந்தபட்சமாக கிலோ ரூ. 53.15-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை அதிகபட்சமாக கிலோ ரூ. 53.65-க்கும் குறைந்தபட்சமாக கிலோ ரூ. 40.65-க்கும் என மொத்தம் ரூ. 20 லட்சத்து 19 ஆயிரத்துக்கு ஏலம் மூலமாக விற்பனையானது. இதேபோல, 18,069 தேங்காய்களை விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், அதிகபட்சமாக டன் ரூ. 16,299-க்கும், குறைந்தபட்சமாக டன் ரூ. 13,069-க்கும் விற்பனையானது. மொத்தம் ரூ. 1 லட்சத்து 05 ஆயிரத்து 266-க்கு விற்பனை நடைபெற்றது. கால்நடைகளை மர்ம நோய் தாக்கவில்லை: ஆட்சியர் தகவல் ஈரோடு மாவட்டத்தில் கால்நடைகளை எவ்வித மர்ம நோயும் தாக்கவில்லை என்று ஈரோடு மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து, அவர் சனிக்கிழமை வெளியிட்ட அறிக்கை:

பவானி அருகே உள்ள காலிங்கராயன்பாளையம் பகுதியில் உள்ள மாரப்பம்பாளையம் மற்றும் செல்லிக்காட்டுவலசு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 5 கால்நடைகள் இறந்ததாக செய்தி வெளியானது. அதைத் தொடர்ந்து ஆட்சியரின் உத்தரவின்படி, அந்தக் கிராமங்களில் ஈரோடு மாவட்ட நோய்ப் புலனாய்வுக் குழு, சென்னை மத்திய பல்கலைக்கழக ஆராய்ச்சிக் கூட வல்லுநர்கள் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். ஏற்கெனவே, பாதிக்கப்பட்ட கால்நடைகள் அனைத்துக்கும் காலிங்கராயன்பாளையம், கால்நடை மருந்தகம் மூலமாக உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு, தக்க ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. நோய் பாதிக்கப்பட்ட கால்நடைகளில் தென்பட்ட அறிகுறிகள் மூலமாக அந்தக் கால்நடைகள் வெறிநோயினால் பாதிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

வெறிநோயால் பாதிக்கப்பட்ட நாய்கள் கடித்ததன் மூலமாகப் இந்நோய் பரவியிருக்கும் எனவும் தெரியவந்துள்ளது. எனவே, பாதிக்கப்பட்ட கிராமத்தில் உள்ள அனைத்து நாய்களுக்கும், இலவசமாக வெறிநோய்த் தடுப்பூசி போட கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், தீவிரக் கண்காணிப்பு மேற்கொள்ள கால்நடைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிக் கூடம் மற்றும் கால்நடை மருத்துவர்கள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளது. எனவே, கால்நடை வைத்திருப்போர் மர்மநோய் என்று பீதியடைய வேண்டாம் என்றும், கால்நடைகளை நோயில் இருந்து பாதுகாக்க உரிய பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆறு, ஏரி, பாசனக் கால்வாய் ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும்:இயற்கை விவசாய மாநாட்டில் தீர்மானம்**

தமிழகத்தில் உள்ள ஆறு, ஏரி, பாசனக் கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வார வேண்டும் என்று திருவண்ணாமலையில் நடைபெற்ற இயற்கை விவசாய மாநில மாநாட்டில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழக இயற்கை விவசாயிகள் இயக்கம், ஒருங்கிணைந்த விவசாயிகள் உரிமை மீட்புச் சங்கம் இணைந்து மாநில இயற்கை விவசாய மாநாட்டை நடத்தியது. திருவண்ணாமலை அரசு கலைக் கல்லூரி சந்தை மைதானத்தில் ஞாயிற்றுக்கிழமை இந்த மாநாடு நடைபெற்றது.

மாநாட்டுக்கு இயற்கை விவசாயிகள் இயக்கத்தின் மாநில பொதுச்செயலர் எஸ்.ஆர்.ஜாகிர்ஷா தலைமை வகித்தார். ஒருங்கிணைந்த விவசாயிகள் உரிமை மீட்புச் சங்க மாநிலத் தலைவர் எஸ்.தாமஸ், இயற்கை விவசாயிகள் இயக்க மாவட்டச் செயலர் பி.ரமண ஜோதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநாட்டு ஒருங்கிணைப்புத் தலைவர் தெய்வசிகாமணி தீர்மானங்களை வாசித்தார். தொடர்ந்து, ஒருங்கிணைந்த உரிமை மீட்புச் சங்க மாவட்டச் செயலர் ஜி.சரவணன், மாநில சட்ட ஆலோசகர் கே.சைனிதா, மாவட்டத் தலைவர் ஆர்.ராதாகிருஷ்ணன், திரைப்பட நடிகரும், சமூக ஆர்வலருமான

ரோகிணி ஆகியோர் பேசினர். மாநாட்டில், தமிழகத்தில் ஆக்கிரமிப்பின் பிடியில் உள்ள ஏரிகள், ஆறுகள், பாசனக் கால்வாய்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, தூர்வார வேண்டும். விவசாயிகள் வாங்கிய அனைத்து கடன்களையும் மத்திய, மாநில அரசுகள் தள்ளுபடி செய்ய வேண்டும். கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும். காவிரி - முல்லைப் பெரியாறு பிரச்னைக்கு தீர்வு கண்டு, தமிழக விவசாயிகளை காப்பாற்ற வேண்டும். விவசாயத்துக்கு தங்கு தடையின்றி, மும்முனை மின்சாரம் வழங்க வேண்டும். மீத்தேன் எரிவாயு திட்டத்தை விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் குழாய் பதித்து எடுத்துச் செல்ல வேண்டும். இயற்கை விஞ்ஞானி நம்மாழ்வார் பிறந்த நாளை விவசாயிகள் தினமாக அறிவிக்க வேண்டும் என்பன உள்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டில், இயற்கை விவசாயிகள் இயக்கத்தின் மாநிலத் தலைவர் கே.ஆர்.முகமது ஏஹியா, மாநில பொதுச் செயலர் எஸ்.ஆர்.ஜாகிர்ஷா, மாநில, மாவட்ட நிர்வாகிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள், விவசாயிகள் பலர் கலந்துகொண்டனர்.

**விளைச்சல் குறைவால் பூக்களின் விலை உயர்வு!**

தருமபுரி மாவட்டத்தில் பூக்களின் விளைச்சல் குறைந்ததால் அவற்றின் விற்பனை விலை பன்மடங்கு உயர்ந்திருக்கிறது. தருமபுரி மாவட்டம் பாலக்கோடு, பென்னாகரம், மாரண்டஅள்ளி, தொப்பூர், பஞ்சப்பள்ளி ஆகிய பகுதிகளில் பூக்கள் சாகுபடி பரவலாக நடைபெற்று வருகிறது.

இங்கிருந்து, பெங்களூரு, சென்னை, மாலூர் (கர்நாடகம்), திருப்பத்தூர், வேலூர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மொத்த வியாபாரிகள் வாங்கிச் செல்கின்றனர். மொத்த வியாபாரிகள் பூக்களை விவசாயிகளிடமிருந்து பெற்று தருமபுரி நகரப் பேருந்து நிலையத்துக்குள் விற்பனை செய்து வருகின்றனர்.

கடந்த 10 நாள்களாகவே வரத்துக் குறைந்துள்ளதாகக் கூறும் பூ வியாபாரி பி. ரவி, அதனால் விலை பன்மடங்கு உயர்ந்திருப்பதாகக் கூறுகிறார். ரூ. 100 முதல் ரூ. 120 வரை விற்பனை செய்யப்பட்ட ஒரு

கிலோ கனகாம்பரம் ஞாயிற்றுக்கிழமை ரூ. 250 வரை விற்பனை செய்யப்பட்டது. ரூ. 50 முதல் ரூ. 60 வரை விற்பனை செய்யப்பட்ட சாமந்தி, தற்போது ரூ. 100 முதல் ரூ. 120 வரை உயர்ந்திருக்கிறது.

ரூ. 60 முதல் ரூ. 80 வரை விற்கப்பட்ட சாக்கடா, தற்போது ரூ. 250 முதல் ரூ.340 வரை விற்பனை செய்யப்படுகிறது. ரூ. 100 முதல் ரூ. 120 வரை விற்பனை செய்யப்பட்ட குண்டு மல்லி தற்போது ரூ. 300-க்கு விற்பனையாகிறது. ரூ. 30 முதல் ரூ. 40 வரை விற்பனையான பட்டன் ரோஸ் தற்போது ரூ. 140-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

சிவராத்திரிப் பெருவிழாவையொட்டி சிவன் கோயில்களில் திங்கள்கிழமை சிறப்பு வழிபாடு நடைபெறவிருக்கும் நிலையில், பூக்களின் விலை உயர்வு பக்தர்களுக்கு கவலையை ஏற்படுத்தியிருக்கிறது. அதேநேரத்தில், விளைச்சல் குறைவாக இருந்தாலும் ஓரளவு கட்டுப்படியான விலை கிடைப்பதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர். விவசாயத்துக்கான அளவுக்கு மழை கிடைக்காமல் போய்விட்டதால், தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த பூ சாகுபடியாளர்கள் சொட்டு நீ௦ர்ப் பாசன முறையைப் பொருத்தியிருக்கின்றனர். சிவராத்திரி பெருவிழாவுக்குப் பிறகு பூக்களின் விலை சீரடையலாம் எனத் தெரிகிறது.

**தருமபுரியில் விலை குறைந்த தர்ப்பூசணி!**

திண்டிவனம் பகுதிகளில் இருந்து தருமபுரிக்கு வரவழைக்கப்படும் தர்ப்பூசணி, அடிக்கும் வெயிலுக்கு இதமாக விலை குறைந்திருக்கிறது.

கொடுமையான வெயிலுக்குக் குளிர்ச்சியாகக் கிடைப்பது தர்ப்பூசணி என்றழைக்கப்படும் கோசாப்பழம். ஆப்பிரிக்க நாட்டைப் பூர்வீகமாகக் கொண்ட இந்தப் பழம், மேலை நாடுகளில் இருந்து தற்போது நமது நாட்டுக்குள்ளேயும் பரவலான சாகுபடியைப் பெற்றிருக்கிறது.

பச்சை, வெள்ளை கலந்த தடிமனான தோலைக் கொண்ட இந்தப் பழம் உள்ளே நல்ல சிவப்பு நிறத்துடனான சதைப் பற்று மிக்கது. நீர்ச்சத்து

அதிகமான இந்தப் பழம், வீதிகள் தோறும் எளிதாகக் கிடைக்கிறது. வைட்டமின் ஏ, வைட்டமின் பி உள்ளிட்ட ஏராளமான சத்துகள் நிறைந்த இந்தப் பழம், புற்றுநோயைத் தடுக்கும், ரத்த அழுத்தம் மற்றும் நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்தும் அற்புதங்களைக் கொண்டது.

தருமபுரி நகரில் கடந்த 10 நாள்களுக்கு முன்பு வரை ஒரு கிலோ ரூ. 20 முதல் ரூ. 25 வரை விற்பனை செய்யப்பட்ட தர்ப்பூசணி, தற்போது ரூ. 15-க்கு சரிந்திருக்கிறது. 3 முதல் 12 கிலோ வரையிலும் இந்தப் பழங்கள் எடை கொண்டவையாக இருக்கின்றன. வெட்டித் துண்டுகளாகவோ அல்லது மிக்ஸியில் போட்டு சாறாகவும் தர்ப்பூசணியை எடுத்துக் கொள்ளலாம். வேறெதையும் கலக்கத் தேவையில்லை.

வெயிலின் தாக்கத்திலிருந்து தோலைக் காக்கும் நிறமியைக் கொண்டிருக்கும் இந்தத் தர்ப்பூசணி, வெயில் காலமாகக் கருதப்படும் 3 மாதங்கள் மட்டுமே கிடைக்கும். கரும்பச்சை நிறத் தோலைக் கொண்ட இன்னொரு வகையான தர்ப்பூசணியும் தருமபுரி பகுதிகளில் கிடைக்கிறது. இந்தப் பழம் ஆண்டுதோறும் விளையும் வகை என்கிறார் விற்பனையாளர். இதன் விலை கிலோ ரூ. 25.

**கோமாரி நோய்த் தடுப்பூசி முகாம்**

ஊத்தங்கரையை ஒன்றியத்தில் மாடுகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது.ஊத்தங்கரை, அம்பேத்கர் நகர்,தாண்டியப்பனூர், நாட்டாண்மை கொட்டாய், அப்பிநாய்க்கன்பட்டி, நாப்பிராம்பட்டி, மாரம்பட்டி,கானம்பட்டி,பாவக்கல்,சிங்காரப்பேட்டை, அனுமன்தீர்த்தம், கல்லாவி மற்றும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களில் அந்தந்தப் பகுதிகளுக்கு உள்பட்ட கிளை கால்நடை மருத்துவமனை மருத்துவர்களால் இந்த தடுப்பூசி போடப்பட்டுகிறது. தமிழக அரசின் உத்தரவின்பேரில் நடைபெறும் இந்த சிறப்பு முகாமில் பல ஆயிரக்கணக்கான பசு மாடுகள் பாதுகாக்கப்படுகின்றன. சனிக்கிழமை வண்டிக்காரன் கொட்டாய் கிராமத்தில் உள்ள பசுமாடுகளுக்கு கோமாரி நோய்த் தடுப்பூசி போடும் பணி ஊத்தங்கரை கால்நடை மருத்துவர் பிரபு

மற்றும் மருத்துவக் குழு சார்பில் நடைபெற்றது. வேளாண் துறை சார்பில் சுற்றுலா அழைத்து செல்லப்பட்ட விவசாயிகள்

அரியலூர் மாவட்ட வேளாண் துறை சார்பில், அரியலூர் வேளாண் உதவி இயக்குநர் மோகன் தலைமையில் விவசாயிகள் 50 பேர் சனிக்கிழமை நாகமங்கலம் காய்கனி தோட்டத்துக்கு சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர். சுற்றுலாவின்போது, நெல் ரகங்களின் செயல்விளக்க திடல்கள், சொட்டுநீர் பாசன முறை மூலம் அமைக்கப்பட்ட தக்காளி வயல், கத்திரி வயல், வெண்டை வயல் ஆகியவற்றை விவசாயிகள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். மேலும், அங்கிருந்த மாங்காய், கொய்யா, நெல்லியின் வெவ்வேறு ரகங்களும், மலர் சாகுபடியில் கோழி கொண்டை பூ வயல், சம்பங்கி வயல், பிச்சி பூ வயல், ரோஜா பூ வயல் ஆகியவை விவசாயிகளை கவரும் விதத்தில் இருந்தது.

இந்த காய்கனி தோட்டமானது வேளாண்மை திட்டத்தின் கீழ் செயல்படக் கூடிய அட்மா திட்டத்தின் செயல்பாடுகளுக்கு ஏற்றாற்போல் ஒருங்கிணைந்த பண்ணை தோட்டமாக விளங்குகிறது.

பயிர்கள் சம்பந்தமாக விவசாயிகளுக்கு எழுந்த சந்தேகங்கள் குறித்து வேளாண் அதிகாரிகள் செயல்விளக்கம் அளித்தனர். ஏற்பாடுகளை உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் வாசுகி, சுந்தரமூர்த்தி ஆகியோர் செய்திருந்தனர்.

**வெற்றியூரில் கோமாரி நோய் தடுப்பூசி முகாம்**

அரியலூர் மாவட்டம், திருமானூர் ஒன்றியம், வெற்றியூர் ஊராட்சியில் கால்நடை பராமரிப்பு பாதுகாப்பு துறை சார்பில், கோமாரி நோய் தடுப்பூசி முகாம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. முகாமை ஊராட்சித் தலைவர் திருவேங்கடம் தொடக்கி வைத்தார். கால்நடை உதவி மருத்துவர்கள் மணிகண்டன், லட்சுமி, கால்நடை பராமரிப்பு உதவியாளர்கள் நசீமா,பிச்சைபிள்ளை, வசந்தி ஆகியோர் முகாமில் கலந்து கொண்டு கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போட்டனர்.

முகாமில் வெற்றியூர், விரகாலூர், கள்ளூர்,திருப்பெயர் கிராமத்தில் உள்ள கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டது.

**வெள்ளாடுகள் வளர்ப்பு பயிற்சி**

அரியலூர் மாவட்டம், இடையத்தான்குடி கிராமத்தில் வெள்ளாடுகள் வளர்க்கும் பயிற்சி முகாம் வேளாண் துறை சார்பில் அண்மையில் நடைபெற்றது. பயிற்சியில், வெள்ளாடுகள் வளர்ப்பு, பராமரிப்பு குறித்து கால்நடை மருத்துவர்கள் விளக்கம் அளித்தனர். முகாமில், வேளாண் துறை அதிகாரிகள், விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர். சிறுவூர் கிராமத்தில் நடைபெற்ற பயிற்சி முகாமில் கால்நடை மருத்துவர் ஜெயசுந்தரி கலந்து கொண்டு மாடுகள் வளர்க்கும் முறைகள் குறித்து விளக்கினார்.

**மார்ச் 14-ல் கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்**

தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாட்டில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆய்வு நிலையத்தில், கோழி வளர்ப்பில் தொழில்முனைவோருக்கான 6 நாள் இலவச பயிற்சி முகாம் மார்ச் 14-ம் தேதி தொடங்கவுள்ளது. இதுகுறித்து கல்லூரி முதல்வர் க.ந. செல்வக்குமார் மேலும் தெரிவித்திருப்பது: இந்தப் பயிற்சி முகாம் மார்ச் 19-ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதில், பண்ணைக் கட்டட அமைப்பு, இளங்குஞ்சுகள் பராமரிப்பு, இனப்பெருக்கம், குஞ்சுப் பொரிப்பக மேலாண்மை, தீவனம், நோய் மேலாண்மை, விற்பனை வாய்ப்புகள் உள்ளிட்ட தலைப்புகளில் தொடர்புடைய துறை சார்ந்த வல்லுநர்களால் விரிவான பயிற்சி அளிக்கப்படும். பயிற்சியில் பங்கேற்பவர்களுக்கு சான்றிதழ், கையேடு, தங்கும் விடுதி, மதிய உணவு ஆகியவை இலவசமாக வழங்கப்படும். கோழி வளர்ப்பில் ஆர்வமுள்ள தஞ்சாவூர், திருச்சி, திருவாரூர், நாகை, புதுக்கோட்டை மாவட்டங்களைச் சேர்ந்த தொழில்முனைவோர், பண்ணையாளர்கள் முகாம் ஒருங்கிணைப்பாளரை 94455 37760 என்ற செல்லிடப்பேசியில் தொடர்புகொண்டு பெயரைப் பதிவு செய்யலாம்.

**தருமபுரிக்கு 2,000 டன் நெல் அனுப்பிவைப்பு**

நீடாமங்கலத்திலிருந்து 2,000 டன் எடையுள்ள நெல் மூட்டைகள் தருமபுரிக்கு அரவைக்காக சரக்கு ரயில் மூலம் சனிக்கிழமை அனுப்பிவைக்கப்பட்டது.

நீடாமங்கலம், மன்னார்குடி பகுதிகளில் கொள்முதல் செய்யப்படும் நெல் மூட்டைகள் அரவைக்காக வெளி மாவட்டங்களில் உள்ள நவீன அரிசி ஆலைகளுக்கு அனுப்பிவைக்கும் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதன்படி, அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் கொள்முதல் செய்யப்பட்ட நெல் மூட்டைகள் 150 லாரிகளில் நீடாமங்கலம் ரயில் நிலையத்துக்கு சனிக்கிழமை கொண்டுவரப்பட்டன. நெல் மூட்டைகளை சுமைதூக்கும் தொழிலாளர்கள் சரக்கு ரயிலின் 42 பெட்டிகளில் ஏற்றினர். இதைத்தொடர்ந்து, நெல் மூட்டைகள் அரவைக்காக தருமபுரிக்கு சரக்கு ரயிலில் அனுப்பி வைக்கப்பட்டது. நெற் பயிரில் புகையான் நோயை கட்டுப்படுத்த ஆலோசனை திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில் நெற்பயிரில் புகையான் மற்றும் நெற்பழ நோயை கட்டுப்படுத்த ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன.

நடப்பு பருவத்தில் மாவட்டத்தில் நெற் பயிரை புகையான் மற்றும் நெற்பழ நோய் அதிகளவில் தாக்கி வருகிறது.இந்நிலையில், ஒலக்கூர் வட்டத்துக்கு உள்பட்ட ஊரல் பகுதியில் திண்டிவனம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் ஷீபா இதுகுறித்து கள ஆய்வு மேற்கொண்டார். அப்போது விவசாயிகளிடம் பேசிய அவர், புகையானின் தாய் மற்று குஞ்சுகள் பயிரின் அடிப் பகுதியில் இருந்து கொண்டு சாற்றை உறிஞ்சும் தன்மையுடையது. இப்பூச்சியை கட்டுப்படுத்த பயிருக்கு அதிக அளவில் தண்ணீர் பாய்ச்சுவதை தவிர்த்து காய்ச்சலுக்கும், பாய்ச்சலுக்குமான தண்ணீர் கட்ட வேண்டும். வயலில் விளக்குப் பொறி வைத்து புகையானை கவர்ந்து அழிக்கலாம். பொருளாதார சேதநிலை ஒரு தூருக்கு 2 இருந்தால் கட்டுப்படுத்தும் முறைகளை பின்பற்றத் தேவையில்லை. அதற்குமேல் தென்படும் பட்சத்தில் ஒரு ஏக்கருக்கு இமிடாகுளோபிரிட் 40 மி.லி. அல்லது

பிப்ரோணில் 400 கிராம், 80 லிட்டர் தண்ணீரில் கலந்து விசைத் தெளிப்பான் கொண்டு பயிரின் தண்டுப் பகுதி நனையுமாறு தெளிக்க வேண்டும்.

புகையான் பாதிக்கப்படாத வயலில் ஒரு ஏக்கருக்கு 6 லிட்டர் வேப்ப எண்ணெய்யை உபயோகித்து இச்சேதத்தை தவிர்க்கலாம்.

நெற்பழ நோய் தாக்கப்பட்ட வயலில் கதிர்கள் மென்பட்டுத் துணி போன்ற தோற்றத்துடன் பச்சை கலந்த கருப்பு நிற நெற்பழ உருண்டைகள் காணப்படும். இந்நோய் வராமல் தடுக்க இலைப் பருவம் மற்றும் பால் பருவத்தில் 500 கிராம் காப்பர் ஹைட்டிராக்சைடு அல்லது 200 மி.லி. புரப்பிகோனசோல் தெளிக்க வேண்டும்.

இந்த நெற்பழ நோய் காற்று மூலம் பரவக்கூடியது. இந்நோய் வந்த பின் கட்டுப்படுத்துவது கடினம் என்று அவர் கூறினார்.

**ஒரே செடியில் கத்தரி, மிளகாய், தக்காளி விளைவிப்பு:தந்தை-மகள் சாதனை**

சுண்டக்காய் இனத்தைச் சேர்ந்த ஒரே செடியில் கத்தரிக்காய், மிளகாய், தக்காளி ஆகிய 3 காய்களை விளைவித்து புதுச்சேரியைச் சேர்ந்த தந்தை-மகள் சாதனை படைத்துள்ளனர். புதுச்சேரி அடுத்த கூடப்பாக்கத்தைச் சேர்ந்தவர் டி.வெங்கடபதி. இவர், விவசாயத்தில் ஆராய்ச்சி செய்து, கனகாம்பரம் பூ செடிகளில் பல்வேறு ரகங்களை உருவாக்கி உள்ளார். இப்போது அனைத்து நிலங்களுக்கும் ஏற்ற வகையிலான சவுக்கு ரகங்களை உருவாக்கிக் கொடுத்து வருகிறார். சாகுபடியில் விவசாயிகள் லாபம் ஈட்டும் வகையில் பல்வேறு புதிய ரகங்களை உருவாக்கிக் கொண்டே இருக்கிறார். இதற்காக நவீன தொழில்நுட்பங்களை கற்றுக் கொண்டு, அதைச் செயல்படுத்துகிறார். இவரது சேவைக்காக முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம், இவரை தில்லிக்கு வரவழைத்து பாராட்டியுள்ளார். இவரது ஆராய்ச்சிகளின் வழிமுறைகளும், ஆராய்ச்சிகளின் முடிவுகளும் பல்வேறு பல்கலைக்கழகங்கள், ஆராய்ச்சி நிறுவனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை. இவரது விவசாய சேவையைப் பாராட்டி மத்திய அரசு பத்மஸ்ரீ விருதும் வழங்கி உள்ளது.

ஒரே செடியில் 3 காய்கள்: அணுக்கதிர் வீச்சு மூலம் செடிகளை உருவாக்கி வரும் வெங்கடபதி, இதற்காக கல்பாக்கம் அணுமின் நிலையத்துக்குச் சென்று நவீன ரக செடி வகைகளை உருவாக்கி வருகிறார். தற்போது சுண்டக்காய் இனத்தைச் சேர்ந்த ஒரே செடியில் கத்தரி, மிளகாய், தக்காளி விளைவித்துள்ளார். கலாம் கத்தரி, மோடி மிளகாய், சோனியா தக்காளி என அவற்றுக்கு பெயரிட்டுள்ளார். கத்தரி செடியின் ஆயுள் காலம் 6 மாதம். மழைக்காலங்களில் பல்வேறு நோய்கள் தாக்கி வேர்கள் அழுகி செடிகள் இறக்கின்றன. 6 மாத கத்தரி செடியில் இதன் மகசூல் 4 முதல் 8 கிலோ மட்டும் கிடைக்கும். இதனால் இவற்றை நவீன ரக ஆய்வின் மூலம் உருவாக்கி உள்ளார். தந்தைக்கு உதவும் மகள்: இவரது மகள் ஸ்ரீலட்சுமியும் 7 வயது முதலே தந்தைக்கு உதவியாக இருந்து வருகிறார். உயர்தொழில்நுட்பத்தை பயன்படுத்தி கத்தரியை உருவாக்கி உள்ளார். இதுகுறித்து வேங்கடபதி, அவரது மகள் ஸ்ரீலட்சுமி ஆகியோர் தினமணி செய்தியாளரிடம் கூறியது: சுண்டக்காயில் பல வகைகள் உள்ளன. முதலில் ஜப்பான், கொரியா, நாடுகளில் தான் இதன் தொழில்நுட்பங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. இதில் காய்க்கும் இனத்தில் வேர்ச் செடியாக வைத்து கத்தரி செடிகளை ஒட்டுமுறையில் வளர்க்கின்றனர்.

இதற்காக சுண்டக்காய் செடியை கல்பாக்கம் அணுமின் நிலையத்தில் காமா கதிர்வீச்சு செலுத்தி சோதித்தபோது, காய் காய்க்காத இனம் உருவாகியது. இதில் செடிகள் வீரியமாக வளர்கின்றன. அவற்றில் கத்தரி இனத்தை ஒட்டு வைத்து பார்த்த போது, மிக வேகமாக வளர்ந்தன. இதன் மூலம் 6 மாதங்களில் 12 முதல் 18 கிலோ வரை காய்கள் கிடைத்தன. இவற்றின் ஆயுள் காலம் 3 ஆண்டுகள் ஆகும். வேர்ச் செடி ஆதலால் எந்த நோயும் தாக்காது. மேலும் காய்க்காத சுண்டக்காய் செடியில் ஒட்டு முறையில் 3 விதமான காய்கள் கத்தரி, மிளகாய், தக்காளி விளைவித்து சோதனை செய்துள்ளோம். இவை மூன்றும் ஒரே வகையான குடும்பம் என்பதால் 3 இனங்களும் சுண்டக்காயில் ஒட்டி வளர்கிறது.

காய்கள் காய்க்காத சுண்டக்காய் இனத்தை நாங்கள் வடிவமைத்துள்ளோம். அதன் சக்தி செடிகள் வளர்வதற்கே பயன்படுகிறது எனத் தெரிவித்தனர்.

**கடல் உணவுகள் சிறந்த மருந்து**

சிறந்த சுகாதாரத்துக்கு கடல் உணவுகள் சிறந்த மருந்து என்று காட்ரோ நிறுவன மேலாண் இயக்குனர் அர்ஜுன் காட்ரே தெரிவித்தார்.

பெங்களூரில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற கடல் உணவுகள் திருவிழாவில் கலந்து கொண்டு பேசியது: உலக அளவில் கடல் உணவுப் பொருள்களுக்கு அதிக வரவேற்பு உள்ளது. மற்ற உணவுகளை உண்ணுவதன் மூலம் கொழுப்பு சத்துகள் அதிகரிக்கும். ஆனால், கடல் உணவுகளில் சுகாதாரத்துக்கு தேவையான அனைத்து புரதச்சத்துகளும் கிடைக்கின்றன. மீன், இறால், நண்டு போன்றவைகளுக்கு இந்தியா மட்டுமன்றி, ஜப்பான் போன்ற வெளிநாடுகளில் அதிக அளவில் வரவேற்பு உள்ளது. நண்டுவில் அதிக அளவில் புரதச்சத்து உள்ளது. அண்மைக்காலமாக கடல் உணவுகளை சைவமாகக் கருதி பலர் உண்ணுவது வரவேற்கத்தக்கது. கடல் உணவுகளை ஏற்றுமதி செய்து, அதிக அளவில் அந்நிய செலாவணியை ஈட்ட முடியும் என்றார்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**எலுமிச்சை விலை உயர்வு**

திண்டுக்கல்லில் வெயிலின் தாக்கம் அதிகரிப்பு, வரத்து குறைவால் எலுமிச்சை விலை உயர்ந்துள்ளது.திண்டுக்கல், ஒட்டன் சத்திரம், ரெட்டியார்சத்திரம், கொடைக்கானல், சிறுமலை பகுதிகளில் 3000 எக்டேரில் எலுமிச்சை சாகுபடியாகிறது. இங்கிருந்து வெளி மாவட்டங்கள், மாநிலங்களுக்கும் விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

திண்டுக்கல் மார்க்கெட்டிற்கு தினமும் 600 கிலோ வரை எலுமிச்சை விற்பனைக்கு வருகிறது. சாகுபடி காலங்களில் ஒரு கிலோ எலுமிச்சை ரூ.25 முதல் ரூ.40 க்கும் விற்பனையானது. தற்போது எலுமிச்சை வரத்து குறைந்து விட்டது. வெயிலின் தாக்கம் அதிகரிப்பால் எலுமிச்சையின் தேவை அதிகரித்துள்ளது. நேற்று முன்தினம் ஒரு கிலோ எலுமிச்சை ரூ.50க்கும், நேற்று ரூ.70க்கும் விற்பனையானது.

## வெளுத்தும் வாங்கும் வெயில்: மழையை எதிர்பார்க்கும் வாரியம்

கோடை காலத்திற்கு முன்னதாகவே, வெயில் கடுமையாக உள்ளதால், அதிகரித்து வரும் மின் தேவையை சமாளிக்க, மழை பெய்யுமா என்ற எதிர்பார்ப்பில், தமிழ்நாடு மின் வாரியம் உள்ளது.

தமிழகத்தில், ஆண்டுதோறும், கோடை காலமான, மார்ச் முதல் ஆக., வரை, மின் தேவை வழக்கத்தை விட அதிகரிக்கும். 2014 ஜூன், 24ல், தமிழக மின் தேவை, 13 ஆயிரத்து, 775 மெகாவாட்டாக அதிகரித்தது. 2015 கோடை காலத்தில் மழை பெய்ததால், மின் தேவை அதிகரிக்கவில்லை.தற்போது, கோடை காலம் துவங்குவதற்கு முன், வெயில் கடுமையாக உள்ளதால், மின் சாதனங்களின் பயன்பாடு அதிகம் உள்ளது. இதனால், பிப்., 24ல், மின் தேவை, 14 ஆயிரத்து, 538 மெகாவாட்டாக உயர்ந்து, புதிய உச்சத்தை எட்டியது. முதல் முறையாக, மின் நுகர்வும், மார்ச், 4ல், 31 கோடி யூனிட்களை தாண்டியது. வெயில், சட்டசபை தேர்தல் போன்ற காரணங்களால், மின் தேவை மேலும் அதிகரிக்கக் கூடும். இதனால், மின் தேவையை சமாளிக்க, மழை பெய்யுமா என, மின் வாரிய அதிகாரிகள் எதிர்பார்க்கின்றனர்.

இது குறித்து, எரிசக்தி துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது:கடந்த ஆண்டில், யாரும் எதிர்பாராத வகையில் கோடை காலத்தில், இடைவெளி விட்டு, தொடர்ந்து மழை பெய்தது; இதனால், மின் தேவை அதிகரிக்கவில்லை. தற்போது, வெயில், பள்ளி தேர்வு, சட்டசபை

தேர்தலால், மின் தேவை அதிகரித்து வருகிறது. இதை பூர்த்தி செய்ய, மின் நிலையங்கள் முழு அளவில் இயக்கப்படுகின்றன. தனியாரிடமும் மின்சாரம் வாங்கப்படுகிறது.கடந்த ஆண்டை போல், தற்போது கோடையில் மழை பெய்தால், மின் தேவை குறையும்.இவ்வாறு அவர் கூறினார்.

## வெற்றிலை விலை சரிவு

வெற்றிலை ஏலச்சந்தையில் வெற்றிலையின் விலை சரிவடைந்துள்ளதால், வெற்றிலை பயிர் செய்துள்ள விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

ப.வேலூரில், கடந்த வாரம் நடந்த வெற்றிலை ஏலத்தில் கற்பூரி வெற்றிலை முதல் ரகம் வெற்றிலை, 104 கவுளி கொண்ட சுமை ஒன்று, 4,000 ரூபாய்க்கும், இரண்டாவது ரகம், 2,000 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதே போல், வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம், 104 கவுளி கொண்ட சுமை ஒன்று, 7,000 ரூபாய்க்கும், இரண்டாவது ரகம், 2,000 ரூபாய்க்கும் ஏலம் போனது. ஆனால், இந்த வாரம் நடந்த ஏலத்தில், கற்பூரி வெற்றிலை முதல் ரகம் வெற்றிலை, 104 கவுளி கொண்ட சுமை ஒன்று, 3,000 ரூபாய்க்கும், இரண்டாவது ரகம், 1,500 ரூபாய்க்கும் ஏலம் போனது. அதே போல், வெள்ளைக்கொடி வெற்றிலை முதல் ரகம், 6,000 ரூபாய்க்கும், இரண்டாவது ரகம், 1,500 ரூபாய்க்கும் ஏலம் போனது. இதனால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். தற்பொழுது ஆந்திரா வெற்றிலைகள் தமிழகத்துக்கு வருவதாலும், வெற்றிலையின் வரத்து அதிகரித்துள்ளதால், விலை சரிவடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**'இந்திய விவசாயிகள் விடுதலை இயக்கம்': மார்ச் 10ல் டில்லி ஜந்தர்மந்தரில் துவக்கம்**

'மார்ச் 10ல் தேதி, டில்லி ஜந்தர்மந்தரில், 'இந்திய விவசாயிகள் விடுதலை இயக்கம்' என்ற அமைப்பு துவங்கப்படுகிறது' என, இந்திய விவசாயிகள் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் விருத்திகிரி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை: 'இந்திய விவசாயிகளின் விடுதலை இயக்கம்' என்ற அமைப்பு, மார்ச் 10ம் தேதி, டில்லியில் உள்ள ஜந்தர்மந்தரில் துவங்குகிறது. பல்வேறு விவசாய சங்கங்கள் இணைந்து இந்த அமைப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்த அமைப்பு மூலம், விவசாய கடன்களை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும். உற்பத்தி செலவோடு, 50 சதவீதம் கூடுதல் விலை என்ற அடிப்படையில், விளை பொருட்களுக்கு விலை நிர்ணயிக்க வேண்டும். விவசாயிகளுக்கு மருத்துவ செலவு, கல்விக்கடன், ஓய்வூதியம் உள்ளிட்ட திட்டங்களை செயல்படுத்த வேண்டும். மத்திய வேளாண் அமைச்சருக்கு, துணை பிரதமர் அந்தஸ்து வழங்கி, அவர் மூலம் விவசாயத்திற்கு தனியாக வரவு-செலவு அறிக்கை (பட்ஜெட்) வெளியிட வேண்டும். வேளாண் விஞ்ஞானி எம்.எஸ்.சுவாமிநாதன் அறிக்கையை நடைமுறைபடுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்படும். மேலும், மாதம் தோறும், 10ம் தேதியை விவசாயிகள் விடுதலை நாளாக அறிவிப்பது; விவசாயிகள் கோரிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவது; கிராமங்களில் விவசாயிகள் குழுக்களை அமைப்பது; தேசிய குழு அறிவிக்கும் திட்டத்தை செயல்படுத்தவது ஆகியவை, இந்த அமைப்பின் முக்கிய நோக்கம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**மீன் வரத்து அதிகரிப்பால் விலை சரிவு**

சேலம்: தமிழக மீன் மார்க்கெட்டுக்களுக்கு, கடல் மீன்களின் வரத்து, அதிகரித்துள்ள நிலையில், அம்மாவாசை, சிவராத்தி காரணமாக, மீன் விற்பனையில், மந்த நிலை காணப்பட்டதால், விலையில் சரிவு

ஏற்பட்டது. சேலம், வ.உ.சி., மீன்மார்க்கெட் செயலாளர் சர்புதீன் கூறியதாவது: தமிழகத்தின் தூத்துக்குடி, நாகை, கன்னியாகுமரி, ராமநாதபுரம், சென்னையில் இருந்து, கேரளாவின் கொச்சி, திருவனந்தபுரத்திலும் இருந்தும், விற்பனைக்கு வரும் மீன்களின் வரத்து அதிகரித்துள்ளது. அதே நேரத்தில், அம்மாவாசை, சிவராத்திரி பண்டிகை கொண்டாடப்படுனவவதால், மீன்களின் விற்பனை எதிர்பார்த்த அளவு இல்லை. தமிழகத்தில் வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், விற்பனை எதிர்பார்த்த அளவு இல்லாததால், விலை, கிலோவுக்கு, 20 ரூபாய் முதல், 100 ரூபாய் வரை, சரிவு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**அமராவதி சர்க்கரை ஆலையில் துவங்கியது கரும்பு அரவை 2015---16ல், 2,46,500 மெட்ரிக் டன் இலக்கு**



மடத்துக்குளம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், 2015-16ம் ஆண்டுக்கான கரும்பு அரவை தொடங்கியது. மடத்துக்குளம் அருகே, கிருஷ்ணாபுரம் அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், 2015-16ம் ஆண்டுக்கான கரும்பு அரவை நேற்று காலை, 10:40 மணிக்கு தொடங்கியது. மேலாண்மை இயக்குனர் இந்துமதி, தலைவர் பழனிசாமி,

தொழிலாளர் நலஅலுவலர் நவநீதன் மற்றும் நிர்வாகக்குழு இயக்குனர்கள், விவசாயிகள் பங்கேற்றனர். இந்த ஆண்டு அரவைகுறித்து ஆலைநிர்வாகத்தினர் கூறியதாவது: அரவை பருவம், 2015- --16ல் கரும்பு நடவு, 4,276 ஏக்கர், கட்டைகரும்பு, 1,369 ஏக்கர், மொத்தம் 5,645 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டு உள்ளது. சராசரியாக ஏக்கருக்கு, 44 டன்கள் மகசூல் கிடைக்கும் என எதிர்பார்ப்பதோடு, இந்த பருவத்தில் 2,46,500 மெட்ரிக் டன் அரவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த, 2006-07 ம் ஆண்டுக்கு பின், இந்த ஆண்டு ஆலையின் முழுதிறனுக்கு கரும்பு அரவை செய்யப்பட உள்ளது. கடந்த, 2014-15 ம் ஆண்டில், 72,112 மெட்ரிக் டன்கள் அரவை செய்யப்பட்டு, 7.78 சதவீதம் சர்க்கரை கட்டுமானத்தில், 56,750 குவிண்டால் சர்க்கரை உற்பத்தி செய்யப்பட்டது.

இந்த பருவத்தில் 2,46,500 மெட்ரிக் டன்கள், 9.75 சதவீதம் கட்டுமானத்தில் அரவை செய்யவும், 2,40,275 குவிண்டால் சர்க்கரை உற்பத்தி செய்யவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடந்த, 2015-16ம் ஆண்டு நடவு பருவத்தில், புதிய ரக கரும்புகளான கோ 0212, கோ 06022, கோ 0310 ரக கரும்புகளுக்கான மரபணு விதைகள் கோவை கரும்பு இனப்பெருக்க கழகத்திலிருந்து வரவழைத்து, அங்கத்தினர்களுக்கு வழங்கப்பட்டது. ஆலைப்பகுதியில் அதிகளவில் பயிரிடப்படும், கோ 086032 மரபணு விதைகள் நாற்றங்கால் நடவுக்காக வழங்கப்படுகிறது. இவ்வாறு, ஆலை நிர்வாகத்தினர் கூறினர்.

## தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கு 'இன்சூரன்ஸ்' திட்டம் அறிமுகம்

இந்திய தேயிலை வாரியம், தேயிலை தோட்ட தொழிலாளர்களுக்கான இன்சூரன்ஸ் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. தென் மண்டல தேயிலை வாரிய செயல் இயக்குனர் பால்ராசு அறிக்கை: மத்திய அரசின், தொழில், வர்த்தக அமைச்சகம், 12வது ஐந்தாண்டு திட்டத்தின்

கீழ்,தேயிலை வாரியம் மூலம், நாடு முழுக்க, சிறு தேயிலை விவசாயிகளின் தோட்டங்களில் பணிபுரியும் தொழிலாளர்களின் நலன் கருதி, தனி நபர் விபத்து காப்பீடு திட்டத்தை செயல்படுத்தியுள்ளது.

திட்டத்தில் இணைய வயது வரம்பு, 18 -- 70 வரை; தனி நபருக்கான காப்பீடு தொகை, 2 லட்சம். இறப்பு ஏற்பட்டால், 2 லட்சம் ரூபாய் காப்பீடு தொகை வழங்கப்படும். இரு கைகள், இரு கண்கள் இழப்பு ஏற்பட்டால், ஒரு லட்சம் ரூபாய், ஒரு கை, ஒரு கண் இழப்பு ஏற்பட்டால், ஒரு லட்சம் ரூபாய் பெற முடியும். இது தவிர, 2 லட்சம் ரூபாய் மதிப்புள்ள, தனி நபர் காப்பீடு திட்டத்தின் கீழ், ஆண்டு காப்பீடு தொகையாக, 14 ரூபாய் செலுத்த வேண்டும். இத்திட்டத்தில், இயற்கை மரணம், நோயால் மரணம், விபத்து தொடர்பில்லாத மரணம், சுயமாக உருவாகும் காயம், தற்கொலை, தற்கொலை முயற்சி,மது, போதை மாத்திரைகளால் ஏற்படும் மரணம், பால்வினை நோய்கள், சட்டத்திற்கு புறம்பான குற்ற நடவடிக்கையில் ஈடுபடுதல், கர்ப காலம் மற்றும் குழந்தை பிரசவத்தின் போது மரணம் போன்றவற்றிற்கு பொருந்தாது.

இத்திட்டம் குறித்த கூடுதல் விபரங்களை அருகிலுள்ள தேயிலை வாரிய அலுவலகம், அந்தந்த பகுதிகளில் உள்ள தேயிலை விரிவாக்க அலுவலர், தொழிற்சாலை ஆலோசனை அலுவலர், உதவி இயக்குன, துணை இயக்குநர்களை தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு, பால்ராசு கூறியுள்ளார்.

## இயற்கை உரங்களால் அதிக மகசூல் சிறு விவசாயிகள் நம்பிக்கை

நீலகிரி மாவட்டத்தில், விவசாயிகள் இயற்கை உரம் பயன்பாட்டிற்கு படிப்படியாக மாறி வருகின்றனர். நீலகிரியில், தேயிலை உட்பட மலைக்காய்கறி பயிர்களுக்கு கூடுமானவரை, வேதி உரங்கள் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. இவ்வகை உரங்கள் தொடர்ந்து

பயன்படுத்துவதால், மண் சத்து குறைந்து, மண்ணின் தன்மை கெடுகிறது. வேதி உரங்களின் பயன்பாடு காரணமாக, விவசாயிகள் எதிர்பார்த்த விளைச்சல் கிடைப்பதில்லை. மண் பரிசோதனையின் அவசியம் கருதி, அரசு பல்வேறு வகைகளில், விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது. இதன் வாயிலாக, பெரும்பாலான விவசாயிகள் மண் பரிசோதனை செய்து, குறைபாடுகளுக்கு ஏற்ப, நிவர்த்தி செய்து வருகின்றனர். இந்நிலையில், அதிக விளைச் சல் கிடைக்கும் வகையில், முட்டைகோஸ் தோட்டங்களுக்கு, பெரும்பாலான விவசாயிகள் இயற்கை உரங்களை பயன்படுத்த தயாராகிவிட்டனர். குறைந்த விலையில், இயற்கை உரங்கள் உள்ளூரிலேயே கிடைப்பதால், விவசாயிகளுக்கு அனுகூலமாக உள்ளது. இதனால், முட்டைகோஸ் உள்ளிட்ட மலைக்காய்கறி தோட்டங்களில் இயற்கை உரங்களை பயன்படுத்துவதில், விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். அரசு மானியம் வழங்குவதுடன், தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தினால், எதிர்காலத்தில் இயற்கை விவசாயம் அதிகரிக்கும்.

கீழ்கோத்தகிரி பகுதி விவசாயி போஜன் கூறுகையில்,"வேதிஉரங்களால், பூமியில் சத்து குறைந்து, எதிர்பார்த்த மகசூல் கிடைப்பதில்லை. இதனால், குறைந்த விலையில், மாட்டு சாணம் உள்ளிட்ட இயற்கை உரங்களை பயன்படுத்தினால், எதிர்பார்த்த மகசூல் கிடைக்கும் என்ற நம்பிக்கை உள்ளது," என்றார்.

## எண்ணெய் பனை சாகுபடி விவசாயிகளுக்குப் பயிற்சி

பழநி:பழநி வேளாண்துறை சார்பில் எண்ணெய்பனைத் திட்டத்தில் விவசாயிகளுக்கு சாகுபடி பயிற்சி நடந்தது. 40 விவசாயிகள் தேனி மாவட்டம் போடியிலுள்ள எண்ணெய் பனை தோட்டங்களுக்கு அழைத்து செல்லப்பட்டனர். சாகுபடி தொழில்நுட்பங்கள், அதற்கு அரசு தரும் மானிய விபரங்களை தெரிந்துகொண்டனர். பின்பு பழநியில்

பயிற்சிமுகாம் நடந்தது. உதவி இயக்குனர் சுருளியப்பன் தலைமைவகித்தார். வேளாண்துறை மானியத்திட்டங்கள், ருச்சி சோயா நிறுவனத்தின் துணைப்பொதுமேலாளர் ரவிச்சந்திரன் சந்தையிடும் முறைகள் குறித்து பேசினார். வேளாண் அலுவலர் ராஜீ, கள அலுவலர் ரவீந்திரன் உட்பட பலர் பங்கேற்றனர். வேளாண் உதவி அலுவலர் சின்னமாணிக்கம் நன்றி கூறினார்.

## இயற்கை "மாசு'பட்டால் உருவாகும் கொடியநோய்கள்

சுற்றுசூழல் காத்து, மாசில்லா நகரங்களை உருவாக்க மாணவ சமுதாயத்தின் பங்கு மிக முக்கியமாக விளங்குகிறது. சுற்றுபுறத்தை தூய்மையாக வைத்திருப்பது பல வகையிலும் நன்மை பயக்கும் நாம் பிளாஸ்டிக்பொருட்கள் பயன்படுத்துவது பூமிதாய்க்கு இழைக்கும் கொடுமையாகும். இது அளவிடமுடியாதது. ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக் மக்க கூடியதல்ல. விஷவாயு :பிளாஸ்டிக் பொருட்களை பூமியில் ஆங்காங்கே எறியப்படுவதால், நீர் பூமிக்குள் நுழைவதை தடுக்கிறது. மேலும் அதை எரிப்பதால் ஏற்படும் விஷவாயுக்கள் இயற்கையை மாசுபடுத்துகிறது. இதனால் மனிதன் உயிர்வாழ முடியாத சூழல் ஏற்படுகிறது. இக்கேடுகள் புற்றுநோய், மலட்டுதன்மை போன்ற கொடிய நோய்களை உருவாக்குகிறது. மாணவர் படை

மாசற்ற நகரங்கள் உருவாக்குவதில் ஒவ்வொரு தனிமனிதரின் பங்கும் மிக முக்கியம். இதில் வளரும் தலைமுறையான மாணவர்களின் பங்கு மிக முக்கியம். மாசில்லா நகரங்களை உருவாக்குவதில் தேவையான விழிப்புணர்வை மாணவர்களிடமிருந்து ஆரம்பித்தால் அது தலைமுறையாக வளரும். அதிலும் மாணவியர்களிடம் சொல்லும் கருத்துகள் பசுமரத்து ஆணிகள் போல் பதியும். மரங்கள் வளர்ப்பதில் மாணவர்கள் படையை உருவாக்கிட வேண்டும். ஒருபுறம் விழிப்புணர்வு,

மறுபுறம் மரம் வளர்ப்பு நடந்தால் நகரங்கள் அனைத்தும் எதிர்காலத்தில் மாசில்லா நகரமாகும். தூய்மைதான் ஆரோக்கிய வாழ்வு

தாரணி (மாணவி, வி.பி.எம். எம் மெட்ரிக்., பள்ளி, கிருஷ்ணன்கோவில்):

தூய்மையான இருப்பிடம் என்பது ஆரோக்கியமான வாழ்வின் அடிப்படை. மனிதன் இயற்கையை விட்டும், தூய்மையை விட்டும் தூரமாக செல்லும் போது நோய்களின் கூடாரத்தை நோக்கி செல்கிறான். நாடு என்பது வீடுகளின் கூட்டம். வீடும் அதை சுற்றிய இடங்களும் தூய்மையாக இருக்கும்போது ஒட்டு மொத்த நாடும் தூய்மையடைகிறது. இதற்கு மரவளர்ப்பு மிகவும் அவசியம். இதற்கு ஒவ்வொருவரும் முன்வருதல் அவசியம். அதுவே வருங்கால தலைமுறையினருக்கு தரமான பூமியை நல்கும். காடுகள் குறைய பாழ்படுது நீர்,நிலம்

பவித்ராதேவி (மாணவி , வி.பி.எம்.எம். மெட்ரிக்., பள்ளி, கிருஷ்ணன்கோவில்): பசுமை நிறைந்த உலகமாக இருக்கும் வரை, சுற்றுச்சூழல் மாசுபடாமல் இருக்கும். காடுகள் குறைய,குறைய காற்றும், நீரும்,நிலமும் பாழ்படும். மிகுதியாய் மரங்கள் வளர்க்க வேண்டும். இதற்கு மாணவ சமுதாயத்தின் பங்களிப்பு மிகவும் அவசியம். இவர்களின் மூலமே பசுமை நிறைந்த உலகத்தை படைக்க முடியும். பசுமை நிறைந்த உலகமே மாசில்லா நகரத்தின் முதற்படியாகும்.

## தோட்டக்கலையில் இருந்து வேளாண் துறைக்கு மாறும் உதவி இயக்குநர்கள்

தோட்டக்கலைத்துறையில் உதவி இயக்குநர்களாக பணியாற்றி வரும் பி.எஸ்.சி. அக்ரி படித்த பட்டதாரிகள், மீண்டும் விவசாயத்துறைக்கு மாற்றப்பட்டு வருகின்றனர். இதனால் தோட்டக்கலைத்துறையில் அதிகாரிகள் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது.

கடந்த தி.மு.க., ஆட்சியில் விவசாயம், தோட்டக்கலைத்துறைகளை ஒருங்கிணைத்து வட்டார அளவில் உதவி இயக்குநர்கள் நியமிக்கப்பட்டனர். அப்போது வேளாண் துறையில் இருந்து பட்டதாரிகள் உதவி இயக்குநர்களாக தோட்டக்கலைத்துறையில் நியமிக்கப்பட்டனர். இதற்கு பி.எஸ்.சி., தோட்டக்கலை படித்த பட்டதாரிகள் கடும் எதிர்ப்பு தெரிவித்தனர். மேலும் இது தொடர்பாக சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தனர். அந்த வழக்கில் தோட்டக்கலை பட்டதாரிகளுக்கு சாதகமான தீர்ப்பு கிடைத்தது.

அதை தொடர்ந்து தோட்டக்கலைத்துறையில் பணியாற்றும் உதவி இயக்குநர்கள் (பி.எஸ்.சி. வேளாண் பட்டதாரிகள்) விவசாயத்துறைக்கு மாற்றம் செய்யப்பட்டனர். தற்போது இரண்டாவது "பேட்ஜ்' தயாராகி வருகிறது.

விவசாயத்துறை அதிகாரிகள் கூறுகையில், "தோட்டக்கலைத்துறையில் பணியாற்றி வரும் வேளாண் படித்த பட்டதாரிகள் தங்கள் சொந்த துறைக்கு மாற்றம் செய்து வருகின்ற னர். தோட்டக்கலைத்துறை பட்டதாரிகள் தங்களின் வேலைவாய்ப்பு மற்றும் பதவி உயர்வு பாதிக்கப்படுவதாக கோர்ட்டில் வழக்கு தொடர்ந்ததால், மாற்றம் செய்யப்பட்டு வருகின்றனர்' என்றனர். தோட்டக்கலைத்துறையில் இருந்த உதவிஇயக்குநர்கள் வேளாண் துறைக்கு மாற்றப்படுவதால், மாநிலம் முழுவதும் தோட்டக்கலைத்துறையில் உதவி இயக்குநர் பணியிடங்கள் நூற்றுக்கணக்கில் காகலியாகி உள்ளன.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

**தேங்காய் விளைச்சலில் தமிழகம் முதலிடம் பிடித்தது முன்னணியில் இருந்த கேரளா 3–ம் இடத்துக்கு சரிவு**



கொச்சி,

தேங்காய் உற்பத்திக்கு பெயர் பெற்றது கேரள மாநிலம். கொச்சியில் உள்ள தென்னை மேம்பாட்டு வாரியம் சமீபத்தில் ஒரு கணக்கெடுப்பு நடத்தியது. இதில் தேங்காய் உற்பத்தியில் தமிழகம் முதலிடத்தை பிடித்துள்ளதும், முதலிடத்தில் இருந்த கேரளா 3–ம் இடத்துக்கு தள்ளப்பட்டதும் தெரியவந்தது. கணக்கெடுப்பு முடிவுகள் வருமாறு:–

தமிழ்நாட்டில் 465.11 ஹெக்டேரில் தென்னை சாகுபடி நடக்கிறது. இதில் ஹெக்டேருக்கு 14,873 தேங்காய் உற்பத்தி செய்யப்படுகிறது. இது 33.84 சதவீதம் ஆகும். கர்நாடகத்தில் ஹெக்டேருக்கு 9,982 தேங்காய்கள் வீதம்

515.03 ஹெக்டேரிலும் (25.15 சதவீதம்), கேரளாவில் ஹெக்டேருக்கு 7,535 தேங்காய்கள் வீதம் 649.85 ஹெக்டேரிலும் (23.96 சதவீதம்) தென்னை சாகுபடி நடக்கிறது. இந்தியாவின் தேங்காய் உற்பத்தியில் தமிழ்நாடு, கர்நாடகம், கேரளா, ஆந்திரா ஆகிய மாநிலங்கள் மட்டும் 90 சதவீதத்தை பூர்த்தி செய்கின்றன. உலக அளவில் தென்னை சாகுபடி பரப்பளவில் இந்தோனேஷியா, பிலிப்பைன்சுக்கு அடுத்து 3–வது இடத்தில் இந்தியா இருந்தாலும், தேங்காய் உற்பத்தியில் ஹெக்டேருக்கு 10,615 தேங்காய்கள் வீதம் இந்தியா முதலிடத்தில் உள்ளது என்று அதில் கூறப்பட்டுள்ளது.

**விவசாயத்தில் உச்சம் தொட்ட பெண்மணி**



“எட்டு வயதில் நான் முதன் முதலில் என் தந்தையுடன் வயலுக்கு சென்றேன். என் கைகளில் நெல் விதைகளை கொடுத்து, நாற்றங்காலில் தூவும்படி சொன்னார். மகிழ்ச்சியோடு தூவினேன். நான் தூவிய விதைகள் சில நாட்களில் நாற்றுகளாக வளர்ந்ததை பார்த்ததும், அதிசயித்தேன். அப்பா சொன்னபடி அவைகளை பிடுங்கி, உழுது

தயாராக இருந்த நிலத்தில் நட்டுவைத்தேன். அவை வளர்ந்து கதிர்களாயின.

நெற்கதிர்களை அறுத்து, அறுவடையை தொடங்கிவைத்தேன். எட்டு வயதில் இருந்து– எனக்கு திருமணமாகும் வரை, நான் வயலில் இறங்கி விவசாய பணியை தொடங்கிவைத்த பின்புதான், வேலையாட்கள் இறங்கி வேலையை தொடர்வார்கள். விவசாயம் எனக்கு பிடித்துப்போனதால் அப்பாவோடு அடிக்கடி வயலுக்கு போவேன். அப்போது வயலில் கூலி ஆட்கள் வேலை செய்து கொண்டு இருந்தால், என்னையும் அவர்களுடன் சேர்ந்து வேலை செய்யுமாறு அப்பா கூறுவார். நானும் உடனே வயலில் இறங்கி வேலைபார்ப்பேன். களைகளை கண்டால் உடனே பறித்துவிடுவேன்'' என்று கூறும் பெண் விவசாயி பிரசன்னாவுக்கு, 24 வருடங்கள் கழித்து விவசாயம் புகழை அள்ளிக்கொடுத்திருக் கிறது. தனது 32 வயதில் பிரசன்னா பத்மநாபனாக முதல் அமைச்சர் ஜெயலலிதாவிடம் 'வேளாண் அபிவிருத்தி விருது' பெற்றிருக்கிறார். 2 கிலோ விதை நெல்லில் 3 ஆயிரத்து 223 கிலோ நெல் மணிகளை விளையவைத்ததற்காக இந்த விருது வழங்கப்பட்டுள்ளது. 5 லட்சம் ரூபாய் பரிசும் பெற்றுள்ளார். மதுரை திருப்பாலையில் கணவர் மற்றும் குழந்தைகளோடு (பால சம்யுக்தா, தீரஜ்மணி) வசித்துவரும் பிரசன்னா முதுகலை பட்டம் பெற்றவர். ஒருபுறம் வயிற்றுப் பசி தீர்க்கும் விவசாயியாக களம் இறங்கும் இவர், மறுபுறம் மாணவர்களின் அறிவுப் பசியை தீர்க்கும் ஆசிரியையாகவும் பணியாற்றி வருகிறார்.

தனது விவசாய சாதனையை அவர் நம்மோடு பகிர்ந்துகொள்கிறார்!

சிறுவயதில் விவசாயம், படிப்பு இரண்டிலும் உங்களால் எப்படி கவனம் செலுத்த முடிந்தது? ''வயல் வேலைகளில் ஈடுபட்டாலும் படிப்பிலும் எனது கவனம் இருந்தது. உயர்நிலைப்பள்ளியில் படித்துக் கொண்டிருந்தபோது வயலுக்கு செல்வேன். அப்போது அங்கே வேலை பார்த்துக் கொண்டிருப்பவர்கள், 'படிக்கிற பெண்ணுக்கு இங்கே என்ன வேலை?' என்று கேட்பார்கள். அதற்கு அப்பா, 'விவசாயம் நமது

பாரம்பரிய தொழில். படிப்போடு விவசாயத்தையும் கற்றுக்கொள்ளவேண்டும். என் மகள் விவசாயத்தை மட்டுமல்ல, சைக்கிள் ஓட்டுவது, நீந்துவது, கணினி பயிற்சி என்று எல்லாவற்றையும் கற்றுக்கொள்வாள்' என்று அவர்களுக்கு பதில்கொடுத்து, என்னையும் ஊக்கப்படுத்தினார். பள்ளி படிப்பு முடிந்ததும் விவசாய கல்வி பயில நான் ஆசைப்பட்டேன். ஆனால் தவிர்க்க முடியாத காரணத்தால் பி.எஸ்சி. படிக்க வேண்டியதாயிற்று'' உங்கள் திருமணம் பற்றி? ''பி.எஸ்சி. படித்துவிட்டு, பி.எட் படித்தேன். அப்போதே எனக்கு திருமணம் நடந்துவிட்டது. கணவர் என்னை தொடர்ந்து படிக்க ஊக்கப்படுத்தினார். அதனால் எம்.எஸ்சி. படித்து ஆசிரியையாக பணியாற்ற தொடங்கினேன்'' திருமணத்திற்கு பிறகு விவசாய பணிகளில் ஈடுபடும் வாய்ப்பு எப்படி கிடைத்தது? ''கணவர் ஏற்கனவே எனது உறவினர்தான். அவர்களது குடும்பத் தொழிலும் விவசாயம்தான். அவ்வப்போது கணவரோடு வயலுக்கு சென்று விவசாயவேலைகளையும் பார்த்துவந்தேன். என்னுடைய ஆர்வத்தை பார்த்து குறிப்பிட்ட இடத்தை எனக்கு ஒதுக்கிக்கொடுத்து அதில் எனது விருப்பத்திற்கு விவசாயம் செய்யும் சுதந்திரத்தை கணவர் கொடுத்தார். அதனால்தான் இந்த சாதனையை என்னால் படைக்க முடிந்தது''
பள்ளியில் விவசாயம் பற்றியும் மாணவர்களுக்கு கற்றுக் கொடுப்பீர்களா?

''இல்லை. நான் அறிவியல் ஆசிரியை. 9 மற்றும் 10–ம் வகுப்பு மாணவிகளுக்கு அறிவியல் பாடத்தை போதிப்பது என் பணி. மாணவிகள் விவசாயம் பற்றி ஏதாவது சந்தேகம் கேட்டால் மட்டுமே அது பற்றி பேசுவேன்''

விவசாய பணி, ஆசிரியைப் பணி இதில் உங்களுக்கு அதிகம் பிடித்தது எது?

''விவசாயம், ஆசிரியைப்பணி, குடும்ப நிர்வாகம் ஆகிய மூன்றையும் நான் ஒன்றுபோல் பாவிக்கிறேன். நான், எனது கணவர், மாமனார்–மாமியார், குழந்தைகள் ஆகியோர் ஒன்றாக வசிக்கிறோம். காலையில் எழுந்து ஒருசில வீட்டுவேலைகளை செய்துவிட்டு, வயலுக்கு செல்வேன். பின்னர் அங்கிருந்து வந்ததும் பள்ளிக்கு புறப்பட்டு சென்றிடுவேன். மற்ற

வேலைகளையும், எனது குழந்தைகளை பள்ளிக்கு அனுப்பி வைப்பது போன்றவைகளையும் மாமியார் பார்த்துக்கொள்வார். குடும்பத்தினர் அனைவரும் ஒத்துழைப்பதால்தான் என் பணிகளை சிறப்பாக செய்ய முடிகிறது''

உங்களுக்கு கிடைத்த பரிசு தொகை ரூ.5 லட்சத்தையும் எதற்காக செலவிடப்போகிறீர்கள்? ''முழுதொகையையும் விவசாய மேம்பாட்டிற்கே பயன்படுத்துவேன். சொட்டு நீர் பாசனத்தில் நெல் பயிரிடுதல், மாடி தோட்டத்தில் புதிய யுக்திகளை கையாளுதல் போன்றவைகள் எனது அடுத்த இலக்கு'' விருது பெற்ற பிறகு உங்களை பற்றிய சமூக கண்ணோட்டம் எப்படி இருக்கிறது? ''விருது பெற்றதால், என்னிடம் நிறைய பேர் விவசாய ஆலோசனைகளை கேட் கிறார்கள். அவர்களுக்கு என்னால் முடிந்த உதவிகளை செய்கிறேன். இது தொடர வேண்டும் என்று நினைக்கிறேன். அதற்காக என்னை தயார்படுத்தி வருகிறேன். தற்போது 2 கிலோ விதை நெல்லில் 3 ஆயிரத்து 223 கிலோ மகசூல் எடுத்தேன். இதனை முறியடிக்கும் வகையில் செயல்பட விரும்புகிறேன். முழுநேர விவசாயியாகவும் விரும்புகிறேன்''



உங்கள் குழந்தைகளும் விவசாயத்தில் ஈடுபடுவார்களா? ''என் குழந்தைகளுக்கு விவசாயத்தை கற்றுக்கொடுக்கும் பணியை இப்போதே ஆரம்பித்துவிட்டேன். சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் நானும் எனது கணவரும் குழந்தைகளை அழைத்துக்கொண்டு வயலுக்கு செல்கிறோம். மதிய உணவையும் எடுத்துச் செல்வோம். அங்கு கூலி ஆட்களுடன் நாங்களும் வேலை செய்வோம். குழந்தைகளுக்கும் விவசாய

பணிகளை சொல்லி கொடுப்போம். என் மகள் ஆர்வமாக விவசாய பணிகளை கற்றுக் கொள்கிறாள். நிறைய சந்தேகங்களை கேட்டு விளக்கம் பெறுகிறாள். வரப்புகளில் அமர்ந்தோ, வாழைத்தோப்பில் அமர்ந்தோ குழந்தைகளுடன் மகிழ்ச்சி பொங்க மதிய உணவை சாப்பிடுவோம். அதில் கிடைக்கும் சந்தோஷத்துக்கு அளவே இல்லை. குழந்தைகளும் அதையே விரும்புகிறார்கள். பின்னாளில் அவர்கள் விவசாய துறையை தேர்ந்தெடுத்து படிக்க நாங்கள் தூண்டுகோலாய் இருப்போம்''

விவசாய பணிகளில் ஏராளமான பெண்கள் ஈடுபடுகிறார்கள். ஆனாலும் உங்களைப் போன்று ஒரு சிலரால் மட்டும்தானே சாதனை படைக்க முடிகிறது. அது ஏன்? ''பெண்கள் இல்லாமல் விவசாயம் இல்லை. நெல் நாற்றுகளை நடுவது, களை பறிப்பது, அறுவடை செய்வது என எல்லா வேலைகளையும் பெண்கள் செய்கிறார்கள். ஆனால் பெண்கள் முன் நின்று விவசாயம் செய்வதற்கு அவர்கள் வீட்டு ஆண்கள் பெரும்பாலும் அனுமதிப்பது கிடையாது. இது தான் பெண்களின் பின்னடைவுக்கு முக்கிய காரணம்''

விவசாயத்தில் சாதிக்க நீங்கள் எந்த மாதிரியான பயிற்சிகளை பெற்றீர்கள்?

''திருமணமான பின்பு நானும், எனது கணவரும் வேளாண்மை பயிற்சிக்காக பல்வேறு மையங்களுக்கு சென்றோம். அங்கு அதிகாரிகள் அளித்த பயிற்சிகளும் இந்த சாதனைக்கு காரணம். அவர்களின் அறிவுரைப்படி செயல்பட்டோம். பலன் அடைந்தோம். அடுத்தகட்ட சாதனைக்கும் அதிகாரிகள் துணையிருப்பார்கள் என்று நம்புகிறோம்''

நீங்கள் திருந்திய நெல் சாகுபடி மூலம் சாதனை படைத்திருக்கிறீர்கள். ஆனாலும் மற்ற விவசாயிகள் அந்த முறையை பின்பற்ற தயங்குவது ஏன்?

''வழக்கமாக எல்லா விவசாயிகளும் மூட்டைக்கணக்கில் விதைகளை போட்டு நாற்றுகள் வளர்ந்த பின்பு, குறைந்தபட்சம் 5 நாற்றுகளை ஓரிடத்தில் நடுவார்கள். மேலும் அவை சீக்கிரம் வளர வேண்டும்

என்பதற்காக கிலோ கணக்கில் செயற்கை உரத்தை போடுகிறார்கள். அதனால் நிறைய களை வளர்ந்து நெல் செடிகளின் வளர்ச்சி பாதிக்கிறது.

அத்தகைய விவசாயிகள் வேளாண் அதிகாரிகள் சொல்வதை பின்பற்றுவது சிரமம் என்று கருதுகிறார்கள். மேலும் விவசாயத்தை முழுமையாக வேளாண் அதிகாரிகளின் ஆலோசனையின் பேரில் செய்யவும் தயங்குகிறார்கள். திருந்திய நெல் சாகுபடி திட்டத்தில் நாற்று நடுவதற்கு அதற்கான பயிற்சி பெற்றவர்கள் தேவை. கோனாவிடர் போன்ற வேளாண் கருவிகள் வாங்க வேண்டும், குறிப்பாக தண்ணீர் பாய்ச்சுவதில் சில சிரமங்கள் உள்ளன. ஏனென்றால் நீர்மறை நீட்டுகட்டுதல் என்ற முறை திருந்தியநெல் சாகுபடி திட்டத்தில் கடைப்பிடிக்கப்படுகிறது. அதாவது வயலில் நிரப்பப்படும் நீர் முழுவதையும் நெற்பயிர்கள் உறிஞ்சி, தரையில் விரிசல் உண்டாகும்போதுதான் மீண்டும் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். ஆனால் பெரியாறு கால்வாய் பாசன வசதி பெறும் வயல்களில் சில நேரங்களில் முறைப்பாசனம் அமுல்படுத்தப்படும். அந்த நேரங்களில் இதுபோன்ற நீர்பாசன முறையை கடைப்பிடிப்பது கஷ்டம். இதுபோன்ற சில விஷயங்களால் இந்த முறையை கடைப்பிடிக்க விவசாயிகள் தயங்குகிறார்கள்''

'உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குகூட மிஞ்சாது' என்பது போன்ற பழமொழிகள் விவசாயத்தில் ஈடுபட விரும்புகிறவர்களின் தன்னம்பிக்கையை குறைத்துவிடுகிறதல்லவா?

''எங்கள் வீட்டில் விவசாய வரவு–செலவு கணக்குகளை எல்லாம் அப்பா சொல்லச் சொல்ல நான் தான் எழுதி வைப்பேன். முடிவில் வரவு–செலவு கணக்கு பார்த்தால் குறைந்தபட்சம் 4–ல் ஒருபங்கு நஷ்டம் தான் ஏற்பட்டிருக்கும். எப்போதாவது ஒருமுறை செலவுத்தொகை முழுவதும் கிடைக்கும். தற்போது எனது கணவருக்கு சொந்தமான நிலங்களை விவசாயம் செய்யும்போதும் அதே நிலைதான் நீடிக்கிறது. சமீபத்தில் வாழை பயிரிட்டோம். அதற்கான செலவு தொகையோ ரூ.1 லட்சத்து 50 ஆயிரம். ஆனால் வரவு ரூ.60 ஆயிரம்தான். பல்வேறு பயிர்களை பயிரிடுவதால் எதாவது ஒன்றில் கிடைக்கும் லாபம் மற்றவைகளின்

நஷ்டத்தை ஈடுகட்டுகிறது. அதனால் விவசாயத்தை கைவிட்டுவிடாமல் தொடர்கிறோம். இதனை தவிர்க்க, விவசாயியே விற்பனையாளராகவும் இருக்கும்படியான திட்டங்களை அரசு செயல்படுத்த வேண்டும். புதிதாக விவசாயத்துறைக்கு வர விரும்பு பவர்களை அரசு ஊக்கப்படுத்த வேண்டும்'' என்கிறார், பிரசன்னா.

**இந்தியாவில் எங்குமே காணப்படாத அதிசயம்**



**இந்தியாவில் எங்குமே காணப்படாத அதிசயம்**

**ஆ**திச்சநல்லூர் அகழ்வாராய்ச்சியுடன் தொடர்புடைய அதிசய பூமிகளில் ஒன்று, தேரிக்காடு. தமிழகத்தின் வேறு பகுதி மட்டும் அல்ல, இந்தியாவில் எங்குமே பார்க்க முடியாத விசித்திரமான பூமி, தேரிக்காடு.

கண்ணுக்கு எட்டிய தூரம் வரை எங்கு பார்த்தாலும் ஒரே செம்மணல்.

கற்கள் எதுவும் இல்லாமல், ஏறக்குறைய மாவு போன்ற பதத்தில் மிக நைசாகக் காணப்படும் இந்த நிலத்தில் நடந்தால், கால்கள் அரை அடி அளவுக்காவது பூமியில் புதைந்துவிடும் வகையில், மணல் மிக மெதுவானதாக மெத்தை போல இருக்கும். திருநெல்வேலியில் இருந்து திருச்செந்தூர் செல்லும்போது, குரும்பூருக்கு முன்னதாக வலது புறம் திரும்பி நாலுமாவடி, திசையன்விளை வழியாகச் சென்றால் தேரிக்காட்டை அடையலாம். தாமிரபரணி ஆற்றின் தென்கரைப் பகுதியில் கடம்பாகுளத்திற்கு தெற்கே, நாலுமாவடி, புதுக்குடி, சோனகன்விளை, நாதன்கிணறு, காயாமொழி, பரமன்குறிச்சி, நாசரேத் ஆகிய ஊர்களுக்கு இடைப்பட்ட பகுதியில் தேரிக்காடு விரிந்து, பரந்து கிடக்கிறது.

மன்னார் வளைகுடாவை நோக்கி தெற்கு, தென்கிழக்காக சற்றே சரிந்த நிலையில் காணப்படும் இந்த தேரிக்காட்டின் மொத்த பரப்பளவு 12 ஆயிரம் ஏக்கர் என்று கணக்கிடப்பட்டு இருக்கிறது.

கடல் மட்டத்தில் இருந்து 15 மீட்டர் உயரத்தில் இருக்கும் இந்த தேரிக்காட்டில் உள்ள மணல் மேடு சில சமயம், கடல் மட்டத்தில் இருந்து 25 மீட்டர் உயரம் வரை உயர்ந்துவிடும். ஒரு சமயம் உயரம் குறைவாக இருக்கும் இடம், காற்றின் போக்கு காரணமாக அடுத்த சில மணி நேரங்களில் பெரிய மணல் மேடாக மாறிவிடும். அப்போது அந்த மணல் குன்றுகளே மெதுவாக இடம் மாறி நகர்ந்து செல்வதுபோலத் தோன்றும். தென் மேற்கு பருவ மழை காலமான மே மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை அங்கு பலத்த காற்று வீசும்போது இதுபோன்ற மணல் குன்றுகள் இடம் விட்டு இடம் மாறும் மாயா ஜாலங்கள் அடிக்கடி அரங்கேறும். நிமிடத்துக்கு ஒருமுறை அங்கு காட்சிகள் மாறிக்கொண்டே இருப்பதால், அந்த தேரிக்காட்டில் திசை கண்டுபிடித்துச் செல்வது என்பது மிகவும் சிரமம்.

திரும்பிய இடம் எல்லாம் மணல் மேடாக இருப்பதால், இது விவசாயம் செய்வதற்கு ஏற்ற இடம் அல்ல. ஆனால் மழை காலங்களில், அங்குள்ள பள்ளங்களில் தேங்கும் நீர் செயற்கை ஏரிபோல உருவாகும். அதுபோன்ற

இடம் தருவை என்று அழைக்கப்படுகிறது. அந்தப் பகுதியில் தண்ணீர் இருக்கும் காலங்களில் நெல் அல்லது வேறு ஏதாவது பயிரிடுவார்கள்.

தேரிக்காட்டின் மற்ற இடங்களில் முந்திரி செடிகள் அங்கும் இங்குமாக வளர்ந்து இருக்கும். அவ்வப்போது வீசும் பலமான காற்று, மணலை அள்ளி வந்து அந்த முந்திரிச் செடிகள் மீது கொட்டிவிடும். அதுபோன்ற நேரங்களில் முந்திரிச் செடியின் மேல் கிளை மட்டும் வெளியே நீட்டிக்கொண்டு இருக்கும் காட்சி, சமாதிக் குழியில் இருந்து ஏதோ எட்டிப்பார்ப்பது போன்ற பயங்கர தோற்றத்தைத் தரும்.

திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய இரு மாவட்டங்களிலுமாக இந்த தேரிக்காடு அமைந்து இருக்கிறது. ஏறக்குறைய ஒரு பெரிய வட்டமான பகுதிபோல இது காட்சி அளிக்கிறது. இதில் ஆச்சரியம் என்ன என்றால், அங்கே இருப்பது போன்ற செக்கச்செவேல் என்ற மணல் பகுதி, அந்த மாவட்டங்களின் வேறு எந்தப் பகுதியிலும் காணப்படவில்லை என்பது தான்.

அங்கு இருப்பது ஆற்று மணல் அல்ல. இதனால் அவை தாமிரபரணி நதியால் கொண்டு வந்து சேர்க்கப்பட்டவை அல்ல. அதேபோல அவை கடல் மண்ணும் அல்ல. எனவே கடல் பொங்கி வந்து இந்த மணல் மேடு ஏற்பட்டது என்று சொல்வதற்கும் வாய்ப்பு இல்லை. அப்படியானால் இந்த அதிசய மணல் மேடு எப்படித் தோன்றியது? வேறு எங்குமே இல்லாத வகையிலான மணல் எங்கு இருந்து எப்படி வந்தது? என்பது போன்ற வினாக்கள் இன்னும் விடைதெரியாத புதிராகவே இருக்கின்றன.

ஏதோ ஒரு மிகப்பெரிய இயற்கை விளைவு நிகழ்ந்து, அதன் காரணமாக அந்தப் பகுதியில் மட்டும் தேரிக்காடு உருவாகி இருக்கலாம் என்று கருதப்படுகிறது. ஆனால் இப்படி ஒரு அதிசய பூமியை உருவாக்கிய அந்த இயற்கை நிகழ்வு என்ன என்பது மர்மமாகவே இருக்கிறது.

அங்குள்ள மணல் பகுதியில் ஆய்வு மேற்கொண்டபோது, மணல் மூன்று

அடுக்குகளாக இருப்பது தெரிய வந்தது. முதல் அடுக்கு 8 ஆயிரம் ஆண்டுகளுக்கும் முந்தியது என்றும், அதன் மேல் உள்ள இரண்டாம் அடுக்கு, 5 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்டு இருக்கலாம் என்றும், மேல் தளத்தில் உள்ள மணல் பகுதி, ஆயிரம் அல்லது இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு உருவாகி இருக்கலாம் என்றும் கருதப்படுகிறது.

எனவே, தேரிக்காட்டின் மணலுக்கு அடியில், அந்தக் காலத்தில் புதையுண்ட நகரங்களின் எச்சங்கள் இருக்கலாம். அங்குள்ள மணலுக்கு அடியில் இறுக்கமான செந்நிற களிமண் பூமி தென்படுகிறது.

தென் மேற்கு சுழல் காற்றால் அந்தப் பகுதியின் மணல் இடம் மாறுகிறது. அப்போது, அங்குள்ள மரங்கள், வயல்வெளிகள், ஏன், சில கிராமங்களைக் கூட கால ஓட்டத்தில் அந்த மணல் மூடிவிடுகிறது என்று அங்கே ஆய்வு நடத்திய பாதிரியார் கால்டுவெல் தெரிவித்து இருக்கிறார்.

இங்குள்ள மணல் மேடுகள் காற்றின் போக்குக்கு ஏற்ப இடம் மாறுவதால் ஏற்படும் ஆபத்தைக் குறைக்க, இந்தப் பகுதியில் பனை மரங்களை அதிக அளவில் வளர்க்க வேண்டும் என்ற கருத்தை 1848–ம் ஆண்டு அங்கு ஆங்கிலேய ஆட்சியின் கலெக்டராக இருந்த இ.பி. தாமஸ் என்பவர் முன் வைத்தார்.

அவரது முயற்சியால் தேரிக்காட்டில் ஏராளமான பனை மரங்கள் வளர்க்கப்பட்டன. நிறைய பனை மரங்களைக் கொண்ட குதிரைமொழி தேரி இப்போது வனத்துறையின் கட்டுப்பாட்டில் இருக்கிறது.

தாமிரபரணி ஆற்று நாகரிகத்தைத் தேடியபோது, ஆதிச்சநல்லூர் போன்றே தாமிரபரணி ஆற்று நெடுகிலும் உள்ள வேறு சில இடங்களிலும் அகழ்வாய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

அதேபோல தேரிக்காட்டிலும் அகழ்வாராய்ச்சி நடைபெற்றது.

ஆதிச்சநல்லூர் போன்று மிகப்பெரிய அளவில் இல்லை என்றாலும், தேரிக்காட்டிலும் சில அபூர்வமான பொருட்கள் கிடைத்தன.

சில இடங்களில் முதுமக்கள் தாழிகள் புதைத்து வைக்கப்பட்டு இருந்தது கண்ட றியப்பட்டது.

பாலைவனம் போல இருக்கும் தேரிக்காட்டுக்கு அருகே வாழ்வாதாரத்தை அமைத்துக் கொண்டவர்கள், இந்த தேரியில் தங்களது மூதாதையர்களின் உடலை தாழிகளில் வைத்து புதைத்து இருக்கலாம் என்று தோன்றுகிறது.

அவை எந்தப்பகுதியில் வசித்தவர்களின் முதுமக்கள் தாழிகள் என்பது தெரியவில்லை.

அங்கு இருந்த தாழிகளில் கற்கால மனிதர்கள் பயன்படுத்திய கல் ஆயுதங்கள் மற்றும் இரும்பால் செய்யப்பட்ட கத்தி, ஈட்டி போன்ற ஆயுதங்கள் ஆகியவையும் கிடைத்தன. எனவே, ஆதிச்சநல்லூருக்கும், தேரிக்காட்டுக்கும் தொடர்பு இருந்தது என்ற விவரம் தெரியவந்துள்ளது. இதுபற்றி இன்னும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இந்த தேரிக்காட்டில் மற்றொரு அதிசயம், அந்தப் பாலைவனத்தில் ஒரு சோலையாக மேலப்புதுக்குடி என்ற இடத்தில் ஒரு சுனை இருக்கிறது. கோடை காலத்தில்கூட அந்த சுனையில் சுவையான தண்ணீர் கிடைக்கிறது. அந்த சுனையின் கரையில் உள்ள அருஞ்சுனை காத்த அய்யனார் கோவில் புகழ்பெற்றதாகும். பொதுவாக நிலங்களின் வகையை ஐந்து வகையாகக் கூறுவார்கள். அதாவது—

மலையும் மலை சார்ந்த இடமும் குறிஞ்சி.
காடும் காடு சார்ந்த இடமும் முல்லை.
வயலும் வயல் சார்ந்த இடமும் மருதம்.
கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல்.
வெறும் மணல் பிரதேசமாக இருப்பது பாலை.

இந்த ஐந்து வகை நிலமும் ஒரே பகுதியில் இருப்பது அபூர்வம்.

ஆனால் ஒருங்கிணைந்த நெல்லை மாவட்டத்தில் தேரிக்காடு என்ற பாலைவனமும் இருப்பதால், இங்கு ஐந்து வகை நிலங்களும் ஒரு சேர அமைந்துள்ளதைக் காணலாம். தேரிக்காடு போன்றே அதிசயமான பல தகவல்களைக் கொண்டது கொற்கை. தாமிரபரணி ஆற்று நாகரிகத்துடன் தொடர்புடைய கொற்கை அந்தக் காலத்தில் எப்படி புகழுடன் இருந்தது என்பதை அடுத்த வாரம் பார்க்கலாம்.

**பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வரத்து அதிகரிப்பு: சின்னவெங்காயம் விலை வீழ்ச்சி**



பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு சின்னவெங்காயம் வரத்து அதிகரித்துள்ளதால், விலை வீழ்ச்சி அடைந்துள்ளது.

<u>சின்னவெங்காயம்</u>

பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு நாமக்கல், துறையூர், தர்மபுரி, பல்லடம் உள்பட பல்வேறு இடங்களில் இருந்து சின்னவெங்காயம் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கிருந்து உள்ளூர் வியாபாரிகள் மற்றும்

சுற்றுப்புற பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் வாங்கி செல்கிறார்கள். மேலும் கேரளாவுக்கு அதிகளவு அனுப்பி வைக்கப்படுகிறது.

கடந்த 2 மாதங்களுக்கு முன்பு சின்னவெங்காயம் உற்பத்தி குறைவாக இருந்ததால், ஒரு கிலோ ரூ.40–க்கு விற்பனை செய்யப்பட்டது. விலை அதிகமாக இருந்ததால் ஓட்டல்களில் சின்னவெங்காயம் பயன்பாடு குறைக்கப்பட்டு இருந்தது. மேலும் பொதுமக்கள் சின்னவெங்காயம் வாங்குவதை குறைத்து வந்தனர். <u>விலை வீழ்ச்சி</u>

இந்த நிலையில் உள்ளூர் பகுதிகளிலும், வெளிமாவட்டங்களிலும் சின்னவெங்காயம் விளைச்சல் அதிகரித்துள்ளது. இதன் காரணமாக பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு வெங்காயம் வரத்து அதிகரித்துள்ளது. இதனால் விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதன்படி ஒரு கிலோ சின்னவெங்காயம் ரூ.10 முதல் ரூ.15 வரை விற்பனை செய்யப்படுகிறது. விலை வீழ்ச்சியால் விற்பனை அதிகரித்துள்ளது. இது குறித்து வியாபாரிகள் கூறியதாவது:– பொள்ளாச்சி மார்க்கெட்டுக்கு தினமும் சராசரியாக தலா 50 கிலோ எடைகொண்ட 1000 முதல் 1500 மூட்டைகள் சின்னவெங்காயம் விற்பனைக்கு வரும். ஆனால் தற்போது தமிழகம், கர்நாடகாவில் சின்னவெங்காயம் விளைச்சல் அதிகமாக உள்ளதால், மார்க்கெட்டுக்கு தினமும் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் மூட்டைகள் கொண்டு வரப்படுகிறது. <u>அதிகமாக வாங்குகிறார்கள்</u>

கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஒரு கிலோ ரூ.40–க்கு விற்கப்பட்ட சின்னவெங்காயத்தின் விலை, கடந்த சில நாட்களாக ரூ.10 முதல் ரூ.15–க்கு விற்பனை செய்யப்படுகிறது. 2–வது தர வெங்காயம் கிலோ ரூ.8–க்கு விற்பனையாகிறது. விலை வீழ்ச்சி காரணமாக மக்கள் சின்னவெங்காயத்தை அதிகமாக வாங்கி செல்கிறார்கள். மேலும் ஓட்டல் உரிமையாளர்களும் சின்னவெங்காயத்தை அதிகமாக பயன்படுத்த தொடங்கி உள்ளனர். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**பொள்ளாச்சி பகுதியில் தென்னை மரங்களை கரையான்களிடம் இருந்து காப்பாற்ற சுண்ணாம்பு அடிக்கும் விவசாயிகள்**



பொள்ளாச்சி பகுதியில் தென்னை மரங்களை கரையான்கள் தாக்கி வருகின்றன. இவற்றிடம் இருந்து மரங்களை காப்பாற்ற விவசாயிகள் சுண்ணாம்பு அடித்து வருகிறார்கள். <u>தென்னை விவசாயம்</u>

பொள்ளாச்சி, சுல்தான்பேட்டை, நெகமம், ஆனைமலை உள்பட பல்வேறு இடங்களில் தென்னை விவசாயம் பிரதான தொழிலாக உள்ளது. இங்கு லட்சக்கணக்கான தென்னை மரங்கள் உள்ளன. இதனை நம்பி ஏராளமான விவசாயிகளும், தொழிலாளர்களும் உள்ளனர்.

பி.ஏ.பி. பாசன வசதி மூலமும், மழையின் மூலமும் கிடைக்கும் தண்ணீர் கொண்டு தென்னை விவசாயம் நடைபெற்று வருகிறது. மேலும் மழை பெய்யாத வறட்சி காலங்களில் சொட்டுநீர் பாசனம் மூலம் தென்னை மரங்களை விவசாயிகள் காப்பாற்றி வருகிறார்கள்.

<u>விளைச்சல் அதிகரிப்பு</u> கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பு பொள்ளாச்சி பகுதியில் மழை இல்லாததால், தென்னை விவசாயம் பாதிக்கப்பட்டு வந்தது. இதனால் தேங்காய் உற்பத்தி பாதிக்கப்பட்டது. அதன் பின்னர் பெய்த பருவமழை கைக்கொடுத்ததால், தற்போது தென்னை விவசாயம்

நன்றாக உள்ளது. காய்ந்திருந்த தென்னை மரங்கள் பச்சை பசேல் என்று மாறின. மேலும் தேங்காய், இளநீர் விளைச்சல் அதிகரித்தது.
இதனிடையே கடந்த சில நாட்களாக தென்னை மரங்களை கரையான்கள் அரித்து வருகின்றன. இதனால் மரம் கீழே விழுந்தும் நிலை உள்ளது. இதை தடுக்க விவசாயிகள் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.
<u>சுண்ணாம்பு அடிக்கும் விவசாயிகள் </u>இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:–
கடந்த ஆண்டு பெய்த மழையின் காரணமாக தற்போது தேங்காய், இளநீர் விலை விளைச்சலும் அதிகமாக உள்ளது. ஆனால் கொப்பரை தேங்காய், தேங்காய் விலை கடும் வீழ்ச்சி அடைந்துள்ளது.தற்போது இளநீர் மட்டுமே ஆறுதல் அளிக்கும் வகையில் விலை உயர்ந்து உள்ளது. இதனிடையே பல இடங்களில் தென்னை மரங்களில் அடிப்பகுதியில் கரையான் அரிப்பு அதிகமாக உள்ளது. இதனால் பலம் இழுந்து கீழே விழுந்து விடும் அபாயம் உள்ளது. இதனால் நஷ்டம் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது.
மரத்தின் அடிப்பாகத்தில் இருந்து சுமார் 2 முதல் 3 அடி உயரம் வரை சுண்ணாம்பு அடிப்பதால் கரையான்கள் மரத்தை அரிக்காது. இதன் மூலம் மரம் காப்பாற்றப்படும். ஒரு சில விவசாயிகள் பெயிண்டு அடித்தும் வருகிறார்கள். இவ்வாறு அவர்கள் கூறினார்கள்.

**கொளுத்தும் வெயிலில் குளிர்ச்சியை கொடுக்கும் இளநீர், வெள்ளரிக்காய் விற்பனை மும்முரம்**



கொளுத்தும் வெயிலில் குளிர்ச்சியை கொடுக்கும் இளநீர், வெள்ளரிக்காய் விற்பனை

திண்டுக்கல்லில் மும்முரமாக நடக்கிறது. கொளுத்தும் வெயில்

கோடைகாலம் தொடங்கி விட்டதால் திண்டுக்கல்லில் கடந்த சில நாட்களாக கடுமையான வெயில் கொளுத்தி வருகிறது. மதிய வேளையில் சாலையில் நடந்து செல்ல முடியாத அளவுக்கு கொதிக்கிறது. இதனால் வெயிலின் கொடுமையில் இருந்து தப்பிக்க, உடலுக்கு குளிர்ச்சியை கொடுக்கும் உணவுகள், குளிர்பானங்கள் விற்பனை சூடுபிடிக்க தொடங்கி உள்ளது. அதிலும் வெள்ளரிக்காய், இளநீர் விற்பனை அதிகமாக நடக்கிறது. திண்டுக்கல் மாவட்டத்தில் சின்னாளப்பட்டி, கொடைரோடு, நிலக்கோட்டை, ஒட்டன்சத்திரம், பழனி, தாடிக்கொம்பு, உலகம்பட்டி, சிலுவத்தூர், ஏ.வெள்ளோடு உள்பட பல்வேறு பகுதிகளில் வெள்ளரிக்காய் பயிரிடப்பட்டு உள்ளது. அவை தற்போது விளைச்சல் அடைந்து விட்டதால் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன.

விற்பனை மும்முரம் திண்டுக்கல் சுற்றுவட்டார பகுதிகளில் விளையும் வெள்ளரிக்காய் திண்டுக்கல் நகரில் விற்பனை செய்யப்படுகிறது. திண்டுக்கல் மெயின்ரோடு, திருச்சி சாலை, மேற்குரதவீதி, காந்தி மார்க்கெட், நாகல்நகர் மார்க்கெட் உள்பட பல இடங்களில் வெள்ளரிக்காய் விற்பனை மும்முரமாக நடக்கிறது. சாலையோரங்கள், பஸ் நிலையம் நடைபாதைகளில் கூடைகளில் வைத்தும் வெள்ளரிக்காய் விற்கப்படுகிறது.

கடந்த 2 வாரங்களுக்கு முன்பே விற்பனைக்கு வந்து விட்டாலும், தற்போது தான் வெள்ளரிக்காய் விற்பனை சூடுபிடிக்க தொடங்கி இருக்கிறது. இதனால் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது. திண்டுக்கல்லில் ஒரு வெள்ளரிக்காய் ரூ.5 வரை விற்கப்படுகிறது.

அதேபோல் இளநீர் விற்பனையும் அதிகரித்து இருக்கிறது. சிறுமலை, பழனி, தொப்பம்பட்டி, நெய்க்காரப்பட்டி பகுதிகளில் இருந்து அதிக அளவில் இளநீர் விற்பனைக்காக கொண்டு வரப்படுகின்றன. உடலுக்கு அதிக குளிர்ச்சியை கொடுக்கும் பானம் என்பதால் இளநீரை மக்கள்

அதிகம் விரும்புகின்றனர். திண்டுக்கல்லில் ஒரு இளநீர் ரூ.20 முதல் ரூ.30 வரை விற்கப்படுகிறது. மேலும் கம்பங்கூழ், கேழ்வரகு கூழ் விற்பனையும் விறுவிறுப்பாக நடக்கிறது.

**நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு காய்கறி விதைகள் தட்டுப்பாடு இன்றி வழங்க வேண்டும் உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர் சங்கம் கோரிக்கை**



ஊட்டி,

நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு காய்கறி விதைகள் தட்டுப்பாடு இன்றி வழங்க வேண்டும் என்று உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர் சங்கம் கோரிக்கை விடுத்து உள்ளது.

<u>காய்கறி விதைகள்</u>

நீலகிரி மாவட்ட உருளைக்கிழங்கு மற்றும் காய்கறி உற்பத்தியாளர் சங்க தலைவர் கிருஷ்ணன், தோட்டக்கலை துறை அதிகாரிகளுக்கு அனுப்பியுள்ள கோரிக்கை மனுவில் கூறியிருப்பதாவது:–

நீலகிரி மாவட்டத்தில் தற்போது பல்வேறு காய்கறிகளின் விதைப்பு பருவம் தொடங்கி உள்ளது. கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்திலேயே விவசாயிகளுக்கு தேவையான காய்கறி விதைகள் வழங்கப்பட்டது. ஆனால் இந்த ஆண்டு இதுவரை காய்கறி விதைகள் முழுமையாக

வழங்கப்படவில்லை. இதன்காரணமாக தனியார் நிறுவனங்களிடம் அதிக விலை கொடுத்து காய்கறி விதைகளை வாங்க வேண்டிய நிலை உள்ளது.

விவசாயிகள் பாதிப்பு

இதனை காரணமாக வைத்து தனியார் நிறுவனங்களும் காய்கறி விதைகளின் விலையை உயர்த்தி உள்ளனர். பொருளாதார வசதி இல்லாத சிறு மற்றும் குறு விவசாயிகள் அதிகமான விலை கொடுத்து தனியாரிடம் காய்கறி விதைகளை வாங்க வேண்டிய அவல நிலை உள்ளது. இதனால் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளனர். மேலும் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் அபாயமும் உள்ளது.

தற்போது விதைப்பு பருவம் முடியும் நிலையை எட்ட உள்ளது. எனவே தோட்டக்கலை துறை அதிகாரிகள் உரிய நடவடிக்கை மேற்கொண்டு நீலகிரி மாவட்ட விவசாயிகளின் நலன் கருதி காய்கறி விதைகள் தட்டுப்பாடு இன்றி கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

**கோடை வெயிலின் தாக்கத்தால் தஞ்சையில் தர்ப்பூசணி, இளநீர் விற்பனை அமோகம்**



தஞ்சாவூர்,

கோடை வெயிலின் தாக்கத்தால் தஞ்சையில் இளநீர், தர்ப்பூசணி விற்பனை அமோகமாக நடைபெற்று வருகிறது.

வெயிலின் தாக்கம்

கோடைகாலம் தற்போது தொடங்கி நடைபெற்று வருகிறது. கோடை வெயிலின் உச்சகட்டமான கத்திரி வெயில் எனப்படும் அக்னிநட்சத்திரம் மே மாதம் 4–ந் தேதி தொடங்கி 28–ந் தேதி முடிவடைகிறது. ஆனால் இப்போதே அக்னி நட்சத்திர காலத்தில் வெயில் கொளுத்துவதை போல் தஞ்சையில் வெயிலின் தாக்கம் அதிகமாக இருக்கிறது. இதனால் பகல் நேரங்களில் வீட்டை விட்டு வெளியே வருவதற்கே பொதுமக்கள் அச்சப்படுகின்றனர். அப்படியே வெளியே வந்தாலும் குடையை பிடித்து கொண்டு தான் வருகின்றனர். சிலர் சாலையில் நடக்கும்போது துணியால் தலையை மூடிக் கொண்டு செல்கின்றனர்.

விற்பனை அமோகம்

பகல் நேரத்தில் மின்விசிறிக்கு கீழே அமர்ந்திருந்தாலும் வெப்பகாற்று தான் வீசுகிறது. பகலில் தான் வெயிலின் கொடுமை இருக்கிறது என்றால் இரவிலும் வெப்பத்தின் தாக்கம் அதிக அளவு இருக்கிறது. இதனால் வியர்வை துளியால் நனைய வேண்டியது உள்ளது. வெயிலின் தாக்கத்தினால் இளநீர், தர்ப்பூசணி, நுங்கு விற்பனை தஞ்சையில் அமோகமாக நடைபெற்று வருகிறது. தாகம் தணிப்பதற்காக இளநீர், தர்ப்பூசணி, நுங்கு போன்றவற்றை பொதுமக்கள் அதிகஅளவில் வாங்கி சாப்பிடுகின்றனர். மேலும் குளிர்பானங்களும், சர்பத், ஐஸ் போன்றவைகளும் அதிக அளவில் விற்பனை ஆகிறது. வெள்ளரிபிஞ்சுகளின் விற்பனையும் படுஜோராக நடைபெற்று வருகிறது. இப்போதே வெயிலின் தாக்கம் கடுமையாக இருப்பதால் அக்னி நட்சத்திர காலத்தில் இதைவிட கடுமையாக வெயில் இருக்கும் என்ற அச்சத்தில் பொதுமக்கள் உள்ளனர். கடந்த ஆண்டு தஞ்சையில் வெயில் கடுமையாக இருந்தது. இந்த ஆண்டு வெயிலின் தாக்கத்தை குறைப்பதற்கு மழை பெய்ய வேண்டும் என்று பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.

தினகரன்

**பருத்தி பயிர் காப்பீடு செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

திருவாரூர் மாவட்டத்தில் பருத்தி பயிரை விவசாயிகள் வரும் 15ம் தேதிக்குள் காப்பீடு செய்து கொள்ள வேண்டுமென மாவட்ட நிர்வாகம் தெரிவித்துள்ளது. நடப்பாண்டில் பருத்தி பயிரை தேசிய வேளாண் காப்பீடு திட்டத்தின்கீழ் பயிர் காப்பீடு செய்வதற்கு வங்கியில் கடன் பெற்ற விவசாயிகளுக்கு வரும் 31ம் தேதி, கடன் பெறாத விவசாயிகளுக்கு 15ம் தேதியும் கடைசி நாளாகும். இதன்மூலம் இயற்கை சீற்ற பாதிப்பு ஏற்படும் போதும், பூச்சி மற்றும் நோயால் பயிருக்கு சேதம் ஏற்படும் பட்சத்திலும் இழப்பீடு கிடைக்கும். அதன்படி திருவாரூர் மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் ஆலங்குடி, ஆவூர், வலங்கைமான், திருக்கண்ணமங்கை, திருவிழிமிழலை, குடவாசல், அகரத்திருமாளம், நன்னிலம், பேரளம், கோட்டூர், பாலையூர், தலையாமங்கலம், மன்னார்குடி, குளிக்கரை, வடபாதிமங்கலம், கூத்தாநல்லூார், வடுவூர், நீடாமங்கலம் ஆகிய பிர்காக்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள பருத்தி பயிரை விவசாயிகள் காப்பீடு செய்து கொள்ளலாம். கடன் பெற்ற பெரிய, சிறு மற்றும் குறு விவசாயிகளும் கடன் பெறாத பெரிய விவசாயிகளும் ஏக்கருக்கு ரூ.4,149க்கு இன்சூரன்ஸ் செய்ய, அரசு வழங்கும் 50 சதவீத மானியத்தொகை நீங்கலாக பிரீமிய தொகையாக ரூ.187 செலுத்த வேண்டும். மேலும் கடன் பெறாத சிறு குறு விவசாயிகள் ஒரு ஏக்கருக்கு ரூ.4149க்கு இன்சூரன்ஸ் செய்ய, அரசு வழங்கும் 55 சதவீதம் மானியத்தொகை நீங்கலாக பிரீமியத்தொகை ரூ.168யை செலுத்த வேண்டும்.

இதுதவிர கூடுதலாக ஏக்கருக்கு ரூ.6223க்கு இன்சூரன்ஸ் செய்ய

விரும்பும் கடன் பெறாத விவசாயிகள், கூடுதல் பிரீமியமாக ரூ.560யை தங்கள் விருப்பத்தின்பேரில் செலுத்தலாம். மேலும் பயிர் கடன் பெறாத விவசாயிகள் சிட்டா, அடங்கல் அல்லது கிராம நிர்வாக அலுவலர் சான்று பெற்று தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களிலோ அல்லது சேவைப்பகுதி வணிக வங்கிகளிலோ இதற்கான முன்மொழிவு படிவங்களை பெற்று தங்களின் பிரீமியத்தொகையை செலுத்தலாம். எனவே கடன் பெறாத விவசாயிகளுக்கு வரும் 15ம் தேதியன்று பிரீமியம் செலுத்த கடைசி நாளாகும். எனவே விவசாயிகள் உடனடியாக பயிர் காப்பீடு செய்து கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு மாவட்ட நிர்வாகம் சார்பில் வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**எப்படி வளர்ப்பது?**

இந்த அலங்கார செடிகள் நர்சரி பண்ணைகளில் விதவிதமாக கிடைக்கின்றன. அந்தந்த தட்பவெட்ப நிலைக்கு ஏற்ப வளரும் செடி வகைகளை தேர்ந்தெடுத்து வளர்க்க வேண்டும். அப்போதுதான் அவை செழிப்புடன் வளரும். அத்துடன் அந்த செடிகள் வளர்ப்புக்கு உகந்ததாக மண் ரகம் இருக்கிறதா? என்றும் பார்க்க வேண்டும். அவையும் செடியின் வளர்ச்சியில் பங்கெடுக்கும் என்பதால் செடிகள் தேர்வில் கவனமாக இருக்க வேண்டும். பொதுவாக செடிகளை மண்ணின் தன்மையை கண்டறிந்து அதற்கு ஏற்ப வளர்த்து வந்தால் அழகிய நந்தவனமாக மாறும்.

செடிகளை வளர்க்கும்போது காலை, மாலையில் செடிகளுக்கு தண்ணீர் ஊற்றி வர வேண்டும். மழைக்காலங்களில் தொட்டியில் இருக்கும் மண்ணின் ஈரப்பதத்தை கவனித்து அதற்கு ஏற்ப தண்ணீர் விட வேண்டும். செடிகள் நன்றாக வளர்கிறது என்பதற்காக அவைகளை அப்படியே விட்டுவிடக்கூடாது. அவ்வப்போது செடிகளின் கிளைகளை வெட்டி வர வேண்டும். அதிலும் செடிகள் நேராக வளர்வதற்கு ஏதுவாக ஆரம்பத்திலேயே கிளைகளை கத்தரித்து வர வேண்டும். இலைகள் அதிகம் கொண்ட தாவர செடிகளின் பக்கவாட்டு பகுதிகளை சீராக கத்தரிக்கோலால் கத்தரித்து வர வேண்டும். அப்படி செடிகளை

ஒழுங்குபடுத்தினால்தான் பார்ப்பதற்கு அழகாக தெரியும். உங்கள் மனது மட்டுமன்று உங்கள் வீடும் அழகுடன் ஜொலிக்கும்.

**வீட்டுக்கு அழகு சேர்க்கும் அலங்கார செடிகள்**

என்னதான் மணிக்கணக்கில் செல்போனுடனும், டிவிக்கள் முன்னரும் நாம் அடிமைப்பட்டு கிடந்தாலும் அவை தர முடியாத மன அமைதியை தரவல்லது இயற்கை என்பதை மறுப்பதற்கு இல்லை. குழம்பிய நமது மனநிலையை கூட மாற்ற வல்லவை இயற்கையும் அதன் படைப்புகளும். திறந்த வெளி பூங்காங்களில் நடை பயிலுவது உடலுக்கும், உள்ளதுக்கும் நலம் என்பது அனுபவரீதியாக உணர முடியும். ஆனால் இன்று நாம் ஓடிக்கொண்டிருக்கும் பரபரப்பான வாழ்க்கை சூழலில் எங்கே பூங்காக்களுக்கு செல்வது, எங்கே இயற்கையை ரசிப்பது என்கிறீர்களா? சுவர் இருந்தால் தானே சித்திரம் வரைய முடியும் என்பது போல நேரம் இருந்தால் தானே இவற்றை எல்லாம் அனுபவிப்பதற்கு என கேலியாக சிரிப்பது தெரிகிறது.

நேரம் இல்லை தான், வாரத்தின் 6 நாட்களும் காலையில் அலுவலகம் சென்று இரவு அலுத்து சோர்ந்து வீட்டுக்கு வரும் ஆடவரும், மகளிருக்கும் வரப்பிரசாதமே வாரத்தின் கடைசி நாளான ஞாயிற்று க்கிழமை தான் என்பதை மறுப்பதற்கு இல்லை.

இந்த ஒரு நாளில் வீட்டு வேலை வெளிவேலை அயர்னிங், நண்பர்களை சந்திப்பது என்று ஷெட்யூல் வேறு என்னடா வாழ்க்கை இது என்று சிந்திக்கும் அளவுக்கு பெரும்பாலோருக்கு ஞாயிற்றுக்கிழமை ஒரு நாள் போதாது என்பது உண்மைதான். இவற்றை எல்லாம் தவிர்த்து நம்மையும் மறந்து இயற்கையை ரசிக்கும்போது நமக்குள் இருக்கும் பல பிரச்னைகள் காணாமல் போய்விடும். மன அமைதியும் கிடைக்கும்.

பூங்காக்களுக்கு செல்ல முடியவில்லையே என வருத்தப்படும் அனைவருக்கும் கண்டிப்பாக வீடு இருக்கும். அதுவும் நிற்பதற்கு கூட நேரமின்றி வேலை செய்வோரில் 100க்கு 60 சதவீதம் பேர் கண்டிப்பாக சொந்த வீட்டில் தான் வசிக்கின்றனர். இன்னும் சிலர் அபார்மென்ட்டுகளில் குடியிருப்பவர்களாக உள்ளனர். வெளியே சென்று

தான் இயற்கையை ரசிக்க வேண்டும் என்பது இல்லை.

நமது வீட்டிலேயே இயற்கை பூங்காக்களை உருவாக்கி விட்டால் நாம் நேரம் கிடைக்கும்போதெல்லாம் அவற்றை ரசிக்கலாமே.... பச்சை பசேல் என மனதை கவரும் செடிகொடிகளை தோட்டத்தில் நட்டு பராமரிக்க முடியாது என்கிறீர்களா தேவையில்லை. தோட்டம் வேண்டாம். வீட்டிற்குள்ளேயே தொட்டிகளில் செடிகொடிகளை வளருங்கள். உங்கள் மனதுக்கு அமைதியை மட்டுமல்ல பச்சை பசேல் என காட்சியளிக்கும் அவை உங்கள் வீட்டுக்கும் அழகு சேர்க்கும். ஒவ்வொரு செடியையும் வளர்ப்பதால் ஒவ்வொரு நன்மைகள் கிடைக்கின்றன.

அவை என்ன என்பதை பார்க்கலாம்.

துளசி:

பழங்காலத்தில் வீட்டு முற்றத்தில் தொட்டி அமைத்து தினந்தோறும் பூஜை செய்து துளசி செடியை பராமரித்தார்கள். தற்போது நம்மால் அது இயலாது என்பதால் ஒரு தொட்டியில் துளசி செடியை நட்டு உங்கள் வீட்டு பால்கனியில் வைத்து வளர்க்கலாம். துளசி இருப்பதால் ஒரு தெய்வீக தன்மை உருவாவதோடு, சளி தொல்லைக்கு இரண்டு துளசி இலையை பறித்து ஓரிரு தினங்கள் காலையில் சாப்பிட்டு வந்தால் நல்ல பலன் தரும்.

ஸ்பைடர் பிளான்ட்:

வீட்டில் உள்ள மாசுக்களை சுத்தமாக வெளியேற்றும் செடிகளில் முக்கியமானது ஸ்பைடர் பிளான்ட் ஆகும். இந்த செடி தூசிகளை மட்டும் போக்குவதோடு, வீட்டிற்கு அழகையும் கொடுக்கும்.

பீஸ் லில்லி:

வீட்டில் அழகான செடி வளர்க்க ஆசைப்படுபவர்களின் சாய்ஸ் இதுதான். பீஸ் லில்லியை வீட்டில் வளர்த்தால் வீடு அழகாகக் காட்சியளிப்பதோடு

சுத்தமாக இருப்பது போன்ற உணர்வையும் ஏற்படுத்தும்.

மார்ஜினட்டா:

மிகவும் அழகான அலங்காரச் செடிகளில் மார்ஜினட்டாவும் ஒன்று. நீளமான புற்கள் போல வளரும் இந்தச் செடிகள் வீட்டுக்குள் இருந்தால் தூசி எளிதில் அண்டாது.

ஸ்னேக் பிளாண்ட்:

உள் அலங்காரத்திற்கு ஏற்ற செடிகளில் ஸ்னேக் பிளாண்ட் முக்கியமானது. இந்தச் செடியை வீட்டுக்குள்ளேயும், வெளியேயும் வைக்கலாம். இந்தச் செடி வீட்டுக்குள் இருந்தால் அழகு கூடும்.

கற்றாழை:

பெரும்பாலான வீடுகளில், வீட்டின் உள்ளே வளர்க்கப்படும் செடிகளில் கற்றாழையும் ஒன்று. நிறைய பேர் இந்த செடியை ஒரு குழந்தை போன்றும், தெய்வம் போன்றும் நினைத்து பாதுகாப்புடன் வளர்கின்றனர். ஆனால் உண் மையில் இந்த செடியை வீட்டின் உள்ளே வளர்த்தால், வீட்டினுள் இருக்கும் அனைத்து நச்சுக்களும் வெளியேறிவிடும்.

கமுகு மரம்:

தென்னை மரத்தின் இலைகளைப் போன்று காட்சிதருபவை இந்த செடிகளின் இலைகள். பார்ப்பதற்கு வித்தியாசமாகவும், அழகாகவும் காட்சியளிக்கும் இந்தச் செடி வீட்டுக்குள் இருந்தால், குளிர்ச்சியான காற்று வீசுவது போன்ற உணர்வு ஏற்படும். உரம், பூச்சி கொல்லி மருந்து விலை உயர்வால் விளை நிலங்களுக்கு இயற்கை உரம் பயன்பாடு

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை அதிகளவில் பயிரிடப்பட்டு வந்த நிலையில் தேயிலைக்கு உரிய விலை கிடைக்காததால் பெரும்பாலான விவசாயிகள் மலைத்தோட்ட காய்கறி விவசாயத்திற்கு மாறினர். அதன்படி உருளைக்கிழங்கு, பீன்ஸ், பீட்ரூட், கேரட், நூல்கோல்,

காலிபிளவர், முட்டைகோஸ், மேராக்காய் உள்ளிட்ட காய்கறி பயிர்களை பயிரிட்டு வந்தனர்.

இந்நிலையில் கரும்பாலம், சேலாஸ், கொலக்கம்பை, தூதூர்மட்டம், கிளிஞ்சடா, காசோலை, கேத்தி, பாலடா உள்ளிட்ட பல்வேறு இடங்களில் கடந்த 2 வாரத்திற்கும் மேலாக பரவலான மழை பெய்தது.

இதனால் நீரோடைகள் மற்றும் அணைகளிலும் தண்ணீர் வரத்து அதிகரிக்க துவங்கியது. இதனால் விவசாயிகளும், பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்தனர். மேற்கண்ட பகுதிகளில் பயிர்களை பயிரிட விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். இதனையொட்டி விளை நிலங்களை சமன்படுத்தி அதற்கு இயற்கை உரத்தை பயன்படுத்திகின்றனர். இதன் மூலம் அதிகளவில் மகசூல் கிடைக்கும் எனவும் தெரிவித்துள்ளனர்.

**விவசாயிகளுக்கு பவர் டில்லர் இயந்திரம்**

தஞ்சாவூர் மாவட்டம் பூதலூர் வேளாண்மை வட்டாரத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 4 விவசாயிகளுக்கு 50 சதவீத மானியத்தில் பவர் டில்லர் இயந்திரம் வழங்கப்பட்டது. பவர் டில்லர் கேட்டு விண்ணப்பித்த விவசாயிகளில் முன்னுரிமைப்படி சரவணன், அன்புமணி, மோகன்ராஜா, முருகானந்தம் ஆகியோருக்கு பவர் டில்லர் வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு, பூதலூர் வேளாண்மை உதவி இயக்குநர் பிரபாகர் முன்னிலை வகித்தார். துணை இயக்குநர் சீனிவாசன் பவர் டில்லர்களை வழங்கி பேசினார். வேளாண்மை அலுவலர்கள் உமாமகேஸ்வரி மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

**மனச்சோர்வை போக்கும் சப்போட்டா**




பல், கால் வலியை குணப்படுத்த கூடியதும், வீக்கத்தை வற்றச் செய்யும் தன்மை கொண்டதும், மனச்சோர்வை போக்க கூடியதும், தலைசுற்றல், தூக்கமின்மை போன்றவற்றுக்கு மருந்தாக அமைவது சப்போட்டா. கோடைகாலத்தில் அதிகளவில் கிடைக்கும் சப்போட்டா பழத்தில் பல்வேறு நன்மைகள் உள்ளன. இதன் இலை, பூக்கள், விதைகள் மருந்தாகிறது. சப்போட்டா உற்சாகம் தரும் உணவாக விளங்குகிறது. உறக்கத்தை வரவழைக்க கூடியது. ரத்தத்தை உறைய வைக்கும் தன்மை கொண்டது.

சப்போட்டா இலைகளை பயன்படுத்தி பல், கால் வலிக்கான மருந்து தயாரிக்கலாம். 5 முதல் 10 சப்போட்டா இலைகளை துண்டுகளாக்கி எடுத்துக் கொள்ளவும். இதனுடன் அரை ஸ்பூன் மஞ்சள் பொடி சேர்க்கவும். ஒரு டம்ளர் நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி ஒரு ஸ்பூன் தேன் சேர்த்து குடித்துவர பல் வலி, தலைவலி, கால் வலி சரியாகும். சப்போட்டாவின் இலைகள் பல்வேறு மருத்துவ குணங்களை பெற்றுள்ளது.

சீல்பிடிக்காமல் புண்களை ஆற்றும் தன்மை கொண்டது. வீக்கத்தை வற்ற செய்யும். வலியை குறைக்கும். நுண்கிருமிகளை அழிக்கும். சப்போட்டா இனிமையான உணவாகிறது. இதமான மருந்தாகிறது. பித்தத்தினால்

ஏற்படும் மயக்கம், தலைச்சுற்றல் இருப்பவர்கள், சப்போட்டா பழத்தின் சதையை எடுத்து இரவில் நெய்யில் நனைத்து வைக்கவும். காலையில் இந்த சப்போட்டாவை வெறும் வயிற்றில் சாப்பிட்டு வர தலைசுற்றல், மயக்கம் சரியாகும்.

வெயிலால் ஏற்படும் சோர்வை இது போக்கும். சப்போட்டாவை பயன்படுத்தி தூக்கமின்மை, மன அழுத்தத்துக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: சப்போட்டா பழம், நாட்டு சர்க்கரை அல்லது பனங்கற்கண்டு, காய்ச்சிய பால். சப்போட்டா பழத்தின் சதை பகுதியை பசையாக்கி, நாட்டு சர்க்கரை சேர்த்து நன்றாக கலக்கவும். இதனுடன் காய்ச்சிய பால் சேர்க்கவும். இரவு நேரத்தில் படுக்க செல்லும் முன் இதை சாப்பிட்டால் நன்றாக தூக்கம் வரும்.

வெயிலால் ஏற்படும் சோர்வை சப்போட்டா போக்கும். தூக்கத்தை தூண்டக் கூடியது. இதில் உள்ள பொட்டாசியம், இரும்பு சத்து புத்துணர்வை தருவதுடன், ஆரோக்கியமான மனநிலையை கொடுக்கிறது. சப்போட்டாவை பயன்படுத்தி பேதிக்கான மருந்து தயாரிக்கலாம். ஒரு ஸ்பூன் சப்போட்டா பழத்தின் பசையுடன் ஒரு ஸ்பூன் தயிர் சேர்த்து 3 வேளை சாப்பிட்டுவர மாதவிலக்கு சமயத்தில் அதிக ரத்தப்போக்கு கட்டுப்படும். வயிற்றுபோக்கு, அடிவயிற்று வலிக்கு மருந்தாகிறது.

சப்போட்டா இலையை பயன்படுத்தி தலைவலிக்கான மருந்து தயாரிக்கலாம். சப்போட்டா இலைகளை தேங்காய் அல்லது விளக்கெண்ணெய் விட்டு லேசாக சூடுபடுத்தவும். பின்னர், இதமான சூட்டுடன் நெற்றி மீது பத்தாக வைத்து கட்டவும். அரை மணி நேரத்துக்குள் தலைவலி குறையும். ஊட்டச்சத்துகள், புரதம் கொண்ட சப்போட்டாவை சாப்பிட்டுவர நல்ல பலன் கிடைக்கும்.